குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23] குரோதிஆண்டு ஆடித்திங்கள் 10—8—64 [ இதழ்



வேளூர், ஆடிக் கார்த்திகை விழாவில்
தருமையாதீனம், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்,
சென்னை மாநில ஆளுநர் மாட்சிமைதங்கிய
ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அவர்களும்

திருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஆரூறு தத்துவமும்
ஆணவமும் நீங்கிஉயிர்
வேறுகநின்ற இடஞ்
சொல்லின் — மாறு
இருளாய பாவனையற்
றெங்குமாய் நின்ற
பொருளேகாண் நீயே
புணர். (20)


ஆசிரியர் :-

வித்துவான்,

சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

கோ. சிங்காரவேலன், M. A.,



உ

குருபாதம்

# “ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 | 10–8–64 | இதழ் 9


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | மைசூர் மன்னரும் மடாலய மாண்பும் ... | 495 |
| 2 | வணக்கம் ... | 499 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை .. | 500 |
| 4 | இலங்கை வானொலியின் விமர்சனம் ... | 507 |
| 5 | சித்தாந்த வினாவிடை ... | 509 |
| 6 | தமிழ் கூறு நல்லுலகம் ... | 511 |
| 7 | தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள் ... | 516 |
| 8 | பாடி காவல் ... | 520 |
| 9 | சம்பந்தசரணாலய சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் ... | 523 |
| 10 | மௌன குரு வணக்கம் | 526 |
| 11 | சஹஸ்ராகமம் ... | 528 |
| 12 | ஆடித்திங்களின் அருள் நினைவுகள் ... | 532 |
| 13 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் தலயாத்திரை ... | 535 |
| 14 | மைசூர் மன்னர் வருகை | 545 |
| 15 | செய்திகள் ... | 546 |
| 16 | எதிர்காலம் ... | 551 |

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 23 ] சோபகிருது - ஆடி - 10—8—64 [ இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## மைசூர் மன்னரும் மடாலய மாண்பும்

கன்னட நாட்டின் தலைநகராக விளங்குவது மைசூர்; இங்கு அரசாட்சி புரிந்துவரும் மன்னர்கள் பக்திநெறியிற் பண்பட்டவர்கள்; முறைதவறா அரசுநெறி இவர்கள் சிறப்பு. முன்னவனார் கோயில் பூசை முட்டாது புரிபவர்கள்; மூர்த்தி; தலம், தீர்த்தம் முறையாய்த் தொழுது சற்குருவை நாடும் அருள்வேட்கை உடையவர்கள். சிவனடி மறவாச் செம்மை நலம் வாய்ந்த இம்மன்னர் மரபு. அப்பன்றன் அருளுருவாம் அம்மையின் தண்ணருளையும் மறவாது போற்றிவரும் மாண்புடையதாகும். விஜய சாமுண்டேச்வரியின் திருவருட் காப்பில் நாடு காத்துவரும் இந்நல்லரசர் மரபில் இன்று இருந்துவரும் கனம் ஜெயசாம ராஜ உடையார் அவர்கள் நம் தமிழ்நாட்டின் ஆளுநராக அமைந்துள்ளது தமிழ் மக்களின்

தவப்பேருகும் சைவசித்தாந்தச் செந்நேறியினிடத்து மிக்க ஈடுபாடுடைய இவ்வேந்தர், இந்நேறியின் எழில்காணுதற் கேன்றே தமிழ்மோழிக்கண் ஆர்வம் உடையவராதலே அண்மையிற் புலப்படுத்தினுர். அது ஒன்றே சித்தாந்த நேறிக்கண் இவ்வேந்தர் கோண்டுள்ளவற்றினே விளக்கும்.

திரு ஆளுநரவர்களின் சிவதல யாத்திரை அண்மையில் அம்மன்னருடைய பக்திச்சிறப்பை எடுத்துக்காட்டுவதாகவும் அரசியல் வாழ்வில் ஈடுபட்டுள்ள அனேவரும் பின்பற்றத் தக்கதாகவும் இருந்தது

தருமையாதீனத் திருக்கோயில்கள் சிலவற்றிலும் வந்து வழிபட்டு ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமணியவர்களுடைய கருணே உள்ளத்தோடு கலந்து கனிந்தார் திரு மன்னர் அவர்கள் மன்னரவர்களுடைய முன்னேர்க்கும் இத்தருமையாதீனத் திற்கும் உள்ள தோடர்பு வரலாற்றேடு ஒட்டியதாகும்.

தருமையாதீனத்தில் ஆருவது குருமூர்த்திகளாகிய திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளாட் சிக்காலத்தில் மைசூரில் அப்போது அரசாண்ட மன்னர் ஒரு சமயநாட்டம் உடையவர். அவர் ஒரு சமய மாநாடு கூட்டினுர். பல மாநிலங்களிலிருந்தும் பல பேரி யோர் போந்த அந்த அவையில், அரசர் வேண்டுகோட்படி தருமையாதீன அடியவராக அப்போது வாழ்ந்தருளிய சம்பந்த சரணுலயர் சேன்ருர்கள். குருமூர்த்திகள் அரு ளாணேப்படிச் சேன்ற சுவாமிகள் கரிய திருமேனி உடைய வர்களாக இருப்பார்கள்; மன்னர் எள்ளுவாராக, அண்டங் காக்கை போல உள்ளார்களே' என்றுரைக்கச் சுவாமிகள் சோல்நயமும் போருள்நயமும் போதுள 'அண்டங் காக் கைக்குப் பிறந்தவர் தாமே' என்றுரைத்தார்கள்; நயம் கண்ட மன்னர் பேரிதும் வருந்திச் சுவாமிகள் பேரறிவுத் திறனே வியந்து, தம் விருந்தினராகப் பன்னுள் இருக்க வேண்டுமேன வேண்டிக்கோண்டார். அக்காலத்தில் மைசூர் மன்னர் பெருவிருப்பப்படி, கந்தபுராணம் என்னும் பேருங் கடலேச் சுவாமிகள் மிக அருமையாகச் சுருக்கி, இனிய பாலமுதமாகக் கந்தபுராணச் சுருக்கம் என்ற தமிழ்ப் பனுவலே அருளினுர்கள்.

வேந்தர் அகமுருகி வழிபட்டுப் பெரும்பொருளை சுவாமிகளுக்கு வழங்கினார்கள்; பொருளாசையற்ற புண்ணிய வேந்தராகிய சுவாமிகளோ. மறுத்தால் மன்னர் மனநோதலை உணர்ந்து, 'குருநாதர்க்காக என ஏற்றனர். மன்னரோ, விடாதவராய் இவர்க்கெனப் பின்னும் பெரும்பொருள் நல்கினர்; சுவாமிகள் பின்னும், 'சிவபிரானுக்கு என ஏற்றனர். அரசர் மேலும் வழங்கியகாலை 'அடியார்கட்காக' என ஏற்றனர் சுவாமிகள். குருலிங்க சங்கம பக்திநெறியன்றிப் பின்னும் வேறறியாத சுவாமிகளின் அளவில் பெருமையை அரசர் அறிந்து மகிழ்ந்தார். நகர் வலமாவது செய்வித்து வணங்க முயன்றார் முடியரசர்; குருநாதர் அருளாணையின்றி உடன்படேன் என்று மறுத்துரைத்தார் அவ்வருளரசர். அவ்வாறே தருமைக்குத் தெரிவித்துப் பின் செய்வித்து மகிழ்ந்தார் கன்னடத்தின் காவலர்.

அரசரும் சுவாமிகளும் ஒருகால் உரையாடுங்காலத்துத் தருமையில் அடியார்கள் யாது செய்வார்கள் என்று வேந்தர் கேட்க, சுவாமிகள் அருளிய அருந்தமிழ்ப் பாடல் எண்ணி எண்ணி மகிழ்வதற்குரிய ஏற்றம் உடையதாகும்.

" ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் கல்விகேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்தவாரியுள்ளே ஒன்றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்பிரகாசன்
மெய்த்தொண்டர்களே "

மன்னர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவு இல்லை. பெரும்பொருளைத் தருமையாதீனத்திற்கனுப்பிச் சொக்கநாதப் பெருமான் திருவபிடேகத்திற்கென ஆண்டுகள்தோறும் கபிலைப் பசுக்களை அனுப்ப ஆணையிட்டார். ஆலய வழிபாட்டிற்கு வேண்டிய சந்தனக் கட்டைகளையும் அனுப்புவித்தார். மன்னருடைய அரசியல் ததும்பிய உள்ளத்தில் சமயப்பற்று, தமிழ்ப்பற்று ஆகிய நல்உணர்ச்சிகளை ஊட்டிய சுவாமிகள் விடைபெற்றுத் தருமை மடாலயம் மீண்டு குருநாதர்க்குற்ற திருப்பணிகள் புரிந்தனர் என்பது வரலாறு.

கந்தபுராணச் சுருக்கம் பாடிய இத்தவமுனிவர் தம் குருநாதர் மீது பாடிய சிகாரத்னமாலை ஒரு சிறந்த செந்தமிழ்ச் சித்தாந்தப் பனுவல். இதனைக்கொண்ட வேது குருமூர்த்திகள் வள்ளித்தாயே வளைந்து காட்சிகொடுக்கக் கண்ட அருளனுபவம் உடையவர்கள். திருநெல்வேலியில் இவர்களது ஆலயம் திருப்பணிகள் செய்விக்கப்பெற்று அண்மையிற் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெறவிருப்பதும் இவ்விடத்து அறியத்தக்கது.

மைசூர் அரசுக்கும் மடாலயத்துக்கும் ஏற்பட்ட இந்த இணைப்பு வரலாற்றுப்புகழ் உடைய ஒன்றாகும். நம் சென்னை மாநில ஆளுநராகிய மைசூர் அரசர் அவர்கள் சிவதல யாத்திரை மேற்கொண்ட நிகழ்ச்சியை எண்ணுங்கால் இந்நிகழ்ச்சிகளை ஆதீன வரலாற்றிலிருந்து சுட்ட நேர்ந்தது. பெருமகிழ்விற்குரிய ஒன்றாகும். ஒருவகையில் உலக ஆட்சியாக, பொருளாட்சியாக உள்ளதே அரசாட்சி; ஆனால் அருளாட்சியோ உலகவரம்புகளுக்கு அப்பால் உள்ள ஒளிநிலை உயர் ஆட்சி, இவ்விரண்டிற்கும் இடையில் ஒற்றுமை விளைத்தல் நாட்டுக்கு நலம் பயக்கும். அருளும் அன்பும் தழுவிய அரசியலே உலகை வாழ்விக்கும். சேரமான் பெருமாள், இராசராச சோழர், நின்றசீர் நெடுமாறர் முதலிய தமிழ் முடிவேந்தர்களது வாழ்வு காட்டும் படிப்பினை இதுவேயாகும்.

வீர சைவ நெறியின் விளைபுலமாகிய கன்னடம், உலகப் பெருநெறியாகிய சித்தாந்த சைவத்தின் சிறப்பினை நன்குணர்ந்து பாராட்டி மகிழ்ந்த, மகிழ்வித்த நிகழ்ச்சியை இவ் ஆதீனப் பெருவரலாற்றுத் துணுக்கு ஒன்றால் நினைப்பூட்ட "ஞானசம்பந்தம்" மகிழ்கின்றது. அன்புலகம், இடத்தாலும், மொழியாலும் பிறபிற நிலைகளால் வேறுபட்டாலும் ஒருநெறியே நின்று உலகை வாழ்விக்கும் என்பதைச் சமுதாயம் உணர்வதற்கு இத்தகு வரலாறுகள் வழிகாட்டுவனவாம்.

வாழ்க சைவசித்தாந்தம் !

வளர்க பக்திநெறி !

# வணக்கம்

தைத்திங்கள் போலச் சிறப்புடையதாகிய இவ் ஆடித்திங்களில் வெளிவரும், 'ஞானசம்பந்தம்' இதழ். பல சிறப்புகளையுடையதாய் விளங்குகின்றது. மன்னர் பலர் வணங்கி மாண்புறு பயனைப்பெற்ற நல்லருட் பீடமாகிய தருமையாதீனத்தோடு மைசூர் மன்னர் கொண்ட தொடர்பின் விளக்கம் முதற்கண் காட்சி யளிக்கின்றது. சிவஞானச் செல்வத்தோடு செந்தமிழ்ப் புலமையும் ஒருங்குற்றுத் திகழ்ந்த சம்பந்த சரணுலயரது பெருமையைக் கேள்வியுற்று அவரைத்தம்மிடம் அழைப்பித்து அவரது கல்வி நலம், திருவருள் நலம் முதலியவற்றில், திளைத்த மைசூர் மன்னர் அதன்பின் தருமையாதீனத்திற்கொண்ட அன்பின் சிறப்பு முதலியவற்றை அவ்விளக்கத்திற் காணலாம், அதனேடே ஆடித்திங்களின் அருள் நினைவுகளாகத் தருமையாதீனத்தின் தேவஸ்தானங்களில் நடைபெறும் ஆடிப்பூரச் சிறப்புக்களையும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமானவர்கள் திருக்கயிலையைத் தரிசித்த சீரிய நினைவுகளையும் அறிந்து இன்புறலாம்.

சித்தாந்த சாத்திரங்களில் வினவெண்பாவைப் பற்றிய அரிய பெரிய மறைபொருள் உண்மைகளை ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் தமது அருளுரையாக இவ்விதழில் வழங்கியுள்ளார்கள், அதன்கண் சித்தாந்த பரமுத்தியாகிய உண்மை முத்திநிலை எது என நேயர்கள் சிந்தித்துணர்ந்து திருவருள் பெறலாம்.

தாயுமானவர் அருளிய மௌனகுரு வணக்கப் பாடல்களும், நாவுக்கரசர் நற்றமிழ்ப் பதிகத்தின் அருள் விளக்கமாய் உள்ள, 'பாடிகாவல்' என்னும் கட்டுரையும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானமானவர்களது சிவதல யாத்திரைக் குறிப்புக்களும் இவ்விதழில் புதியனவாய் இடம் பெற்றுள்ளன. சித்தாந்த வினவிடை, சஹஸ்ராகமம், தமிழ் கூறும் நல்லுலகம், தொல்காப்பியச் சொல்லதிகார விளக்கம் என்னும் தொடர்கட்டுரைகள் வழக்கம்போல் தொடர்ந்து வந்துள்ளன. செய்திக் குறிப்புக்கள், எதிர்காலம் என்பனவும் காணப்படுகின்றன. ஞானசம்பந்தம் பெறும் யாவரும் இவ்வாற்ருல் நற்பயன் பெறுவார்களாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

---

## வினா வெண்பா

காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள் — காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர்.

— உமாபதி தேவ நாயனார்.

'சிவஞானம்' என்பது, உயிர்க்குயிராய்நிற்கும் சிவபிரானால் தரப்படுவதேயாகும். அதனை அவன் ஒருமலத்தார்க்கு உள் நின்றே உணர்த்திவிடுகின்றான்; இருமலத்தார்க்கு, ஒருமுறை தன் உண்மை வடிவில் தோன்றி அநுக்கிரகித்துவிடுகின்றான். மும்மலம் உடைய நம்போன்றவர்க்கோ, அவ்வாறின்றி, நம்மைப் போலவே ஆசான் மூர்த்தியாய் எழுந்தருளிவந்து உபதேசித்து அருளுகின்றான். அதனால், உபதேசத்தைப் பெற்றபொழுது கேள்வியளவாய் அரும்பிய சிவஞானம், பின்னர் அதனைச் சிந்தித்தல், தெளிதல் என்பவற்றால் முதிர்ந்து விரிந்த பின்பே நிட்டை கூடுதலாகிய பயனைத் தருவதாகும். ஆகவே, நம்போன்றார்க்கு ஞானம் ஒருமலம் இருமலம் உடைய ஏனையோர் போலாது, 'கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்' என நான்கு வகை நிலையை உடையதாய் விளங்கும்.

இங்ஙனம் சிவஞானம் நான்கு வகையாய் மெல்ல வளர்ந்து நிரம்புங்காலும் ஆசான் மூர்த்தியின் அருட்டுணை இன்றியமையாததாகும். அது பற்றியே இறைவன், ஏனையோர்க்குப்போல இல்லாமல், நம்மனோர்க்கு ஆசாரியனாய் வந்து அருள் புரிந்து

பன்னாள் நம்மோடு அளவளாவி நம்மைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கின்றான். அவ்வாறு அவன் நம்மோடு உடனிருக்குங்கால், முதலிற்கேட்ட உபதேச மொழியைப் பின்பு சிந்திக்கச் செய்தும், அதன் பின்பு தெளியச் செய்தும், முடிவில் நிட்டையிற் கூட்டியும் அனுபூதி நிலையில் நிற்கச் செய்வான். அது பற்றியே ஆசாரியனிடத்து அருளுபதேசம் பெற்றவர்கள், அவனது அடிநிழலைப் பிரியாது அவனுடனே இருப்பர்.

அங்ஙனம் இருந்து சிந்தனையில் ஈடுபடும்பொழுது, எத்தனையோ வகையான ஐயங்கள் தோன்றும். அவ்வையங்களையெல்லாம் அவ்வப்பொழுது ஆசாரியரை வினவியே தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் மாணாக்கர்கள் தம் ஆசாரியரை வினவியறிந்த நிலையைக் காட்டுவனவாக மூன்று நூல்கள் சித்தாந்த சாத்திரங்களில் உள்ளன. அவைகளில் ஒன்று 'வினாவெண்பா' என்பது. 'இருபா இருபஃது, உண்மை விளக்கம்' என்பன ஏனைய இரண்டு. அவைகளை முன்பு குறிப்பிட்டுள்ளோம்.

அம்பலத்தாடும் ஆனந்த நடராசப் பெருமான்,

" அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப் — படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை"

என்று திருமுகம் எழுதிவிடுக்கத் தக்க பெருமையும், அத்திருமுகத்தின்படியே, 'சத்தியோ நிர்வாணதை' என்னும் தீட்சை முறையினால் பெற்றான் சாம்பானுக்கு உடனே முத்தியைக் கொடுத்த அருளாற்றலும் உடைய ஸ்ரீ உமாபதி தேவ நாயனார் தம் ஆசாரியர் மறைஞான சம்பந்தரிடம், தமக்குச் சிவஞானம் பற்றி எழுந்த எத்துணையோ ஐயங்களை வினவித் தீர்த்துக் கொண்டு தெளிவினைப் பெற்றார். அவ்வினாக்களில் இன்றியமையாத சில வினாக்களை அனைவர்க்கும் பயன் உண்டாகுமாறு அமைத்து, 'வினா வெண்பா' என்னும் இந்நூலை அருளியிருக்கின்றார். அவ்வினாக்களில் மிக முதன்மையானதும், எளிதில் விடை யிறுத்தல் இயலாததுமாய் இருப்பது ஒருவினா. அதனையே முதலிற் காட்டிய வெண்பா, குறிப்பிடுகின்றது.

'ஞானம்' எனபது, பொருள்களை அறியும் அறிவு. அவ்வறிவு செயற்படுதற்கு மூன்று பொருள் இன்றியமையாதன

அவை, 'அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள்' என்பன இவையே, 'காண்பான், காட்சி, காட்சிப் பொருள்' எனப் படும். வடமொழியில் இவை, முறையே, 'ஞாதிரு, ஞானம், ஞேயம்' எனப்படும். இவற்றை, 'திரிபுடி' என்பர்

'முத்தி நிலையில் காண்பான் முதலிய மூன்றும் உண்டோ? இல்லையோ?' என்பது தத்துவத் துறையில் உள்ளவர்க்குப் பெரியதோர் ஐயமாகின்றது, ஏனெனில் 'காண்பான் முதலிய மூன்றும் உள்ளன' என்றால் முப்பொருளும் வெவ்வேறாய் நிற்கும் என்று கூறுவதாய் முடியும். அவ்வாறு அவை வேறு வேறாய் நிற்பின், 'தான் அதுவாய் நின்று அநுபவிக்கும் அநுபவ நிலை இல்லை' என்பதாய்விடும்: அதுபற்றி முத்திநிலையில், 'மேற்கூறிய முப்பொருள் இல்லை; காணப்படும் பொருளாகிய ஞேயம் ஒன்றே உள்ளது' எனின், அநுபவிப்பவனும், அநுபவமும் இல்லா தொழியுமாகலின், முத்தியினால் யாதொரு பயனும் இல்லையாம். ஆகவே, 'இதனை எவ்வாறு முடிவு செய்வது' என்பது, பெரியதொரு இடர்ப்பாடான செயலாய் உள்ளது.

இந்நிலையில், 'முத்தி நிலையில் முப்பொருள் இல்லை; காட்சிப் பொருளாகிய ஞேயம் ஒன்றே உள்ளது: அதாவது பரப்பிரும்மம் ஒன்றே உள்ளது' என்கின்றது மாயாவாத மதம். அதனையே,

"காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணார்கள்"

என்கின்றது வினாவெண்பா. அஃதாவது, 'முத்திநிலையில் முப்பொருள் இல்லை'; காட்சிப் பொருள் ஒன்றே உண்டு' என்றால், அதைக் கண்டு இன்புறுகின்றவன் யார்? இன்பம் எது? இவை இரண்டும் இல்லை என்றால், அந்த முத்தியால் யாருக்கு, என்ன பயன்? 'பயன் ஒன்றும் இல்லாதிருப்பதுதான் முத்தி' என்றால், அதனைப் பெரும்பயனாக உண்மை நூல்கள் கூறுவது ஏன்? ஆகவே, 'முத்தியில் முப்பொருள் இல்லை' என்பவர், உண்மை முத்தியை அடையாதவர் ஆகின்றனர். அதனால், 'அவர்களை நன்முத்தி காணார்கள்' என்று அருளினார் உமாபதிதேவ நாயனார்.

இனி, 'முத்தியில் முப்பொருளும் உள்ளன' எனக் கூறுவர் பேதவாத சைவர் முதலியோர். அந்நிலை, தான் அதுவாய்

நிற்கும் சாயுச்ச முத்தியாகாமையால், அதுவும் சித்தாந்த பர முத்து ஆகாது என்பதனையே,

"காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாராதவர்"

என விளக்கினர் அந் நாயனர் (காட்டுவது சிவம்; காட்சிப் பொருள்.)

'இரண்டும் இவ்வாருயின், உண்மை முத்திநிலை எத்தகையது?' என்னும் வினவே, தலைப்பில் காட்டிய வெண்பாவில் அடங்கியுள்ளது.

அதன்கண் வின இருக்கின்றதே யன்றி விடை இல்லை. ஏனைய வெண்பாக்களும் இவ்வாறுதான் உள்ளன. இருபா இருபஃதிலும் இவ்வாறு வினக்கள் மட்டுமே உள்ளன என்பதை முன்பு குறிப்பிட்டிருக்கின்ருேம். 'சித்தாந்த சாத்திரங்களை நன்கு சிந்தித்தால் இவ்வினக்கட்கு உரிய விடைகள் கிடைக்கும்' என்பது ஆசிரியர்கள் கருத்து. 'வின வெண்பாவிற்கு முன்னுள்ள, 'சிவப்பிரகாசம், திருவருட் பயன்' என்னும் நூல்களையும், பின்னுள்ள போற்றிப்பஃருெடை முதலிய நூல்களையும் நன்கு சிந்தித்தால் வினவெண்பாவில் உள்ள விடைகள் கிடைக்கும்' என்பதே உமாபதி சிவாசாரியது திருவுள்ளம்.

'காண்பான், காட்சி, காட்சிப் பொருள்' என்ற மூன்றில், காண்பானுகிய ஞாதிருவே எல்லாவற்றையும் காணுதற்கு உரியவன்; அவன் காணுங்கால் தன்னைக் காணலாம்; தனக்கு வேருய் உள்ள பிற பொருளைக் காணலாம்; தன்னையும் பிறவற்றையும் காணும் தனது அறிவையும் காணலாம். அங்ஙனம் காண்பது, 'யான் இதனைக் காண்கின்றேன்' என்று அறிதலாகும். 'யான்' என்று அறியும் நேரத்தில் தன்னை அறிகிருன்; 'இதனை' என்று அறியும் நேரத்தில் பிறிதொரு பொருளை அறிகின்ருன்; 'அறிகின்றேன்' என்று அறியும் நேரத்தில் தனது அறிவை அறிகின்ருன். இவ்வாறு தன்னையும், பிறிதையும், தன் அறிவையும் அறிந்து நிற்கும் நிலையே, 'காண்பான், காட்சி, காட்சிப் பொருள்' என்ற மூன்றும் உள்ள நிலையாகும். இந்த நிலையே முத்தியினும், யான் சிவத்தை அறிகின்றேன்' என்று சொல்லும்படி இருக்குமாயின், உயிர் சிவம் ஒன்றிலேயே நில்லாமல் மீண்டு தன்னிலும், தன் அறிவிலும்

சென்று உழல்வதாய்விடும். மேற்சொல்லப்பட்ட மூன்றில், சிவம் ஒன்றே இன்பப் பொருள். ஏனையவற்றில் இன்பம் இல்லை; ஆகவே, சிவத்தை அறியும் நிலை இன்பமும், அதினின்றும் நீங்கும் நிலை துன்பமும் ஆகும். அதனால், ஆன்மா தன்னையோ தன் அறிவையோ அறிவதை விடுத்து - அஃதாவது, 'யான் இதனை அறிகின்றேன்' என்பதையும் விடுத்து, சிவம் ஒன்றையே அறிந்து நிற்கும் நிலையே பேரா இன்பப் பெருவாழ்வாகிய முத்தியாம். இந்நிலையில் நிற்க ஒட்டாது அங்கும், 'யான் இதனை அறிகின்றேன்' என்று எண்ணச் செய்வது ஆணவ மலத்தின் சத்தியே யாகும். அந்தச் சத்தியும் அடியோடு ஒழியுமாயின், 'யான் இதனை அறிகின்றேன்' என்ற பகுத்துணர்வு நீங்கி, ஆன்மா சிவத்திலே அழுந்திவிடும். அந்நிலையில், காட்சிப் பொருளாகிய சிவம் ஒன்றைத் தவிர ஏனைய பொருள்கள் இருந்தும் இல்லைதானே? அதாவது அவை ஆன்மாவின் அறிவிற்குப் புலனாகா தொழிவனதாமே? இதனை, 'காண்பான், காட்சி, காட்சிப் பொருள்' என்ற மூன்றும் உள்ள நிலை' என்பதோ? 'அவை இல்லாத நிலை' என்பதோ? 'பொருள்கள் இருப்பினும், அவற்றின் தோற்றம் இல்லை' என்பதுதான் கருத்து.

எனவே, காட்சிப் பொருள் தவிர ஏனைய இரண்டும், பொருளே இல்லை என்றால், 'முத்திப் பேறு யாருக்கு? அதில் இன்பம் என்ன உண்டு?' என்பன போன்ற தடைகளெல்லாம் எழும். அதனால்தான்,

"காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துஉண்மை
காண்பார்கள் நன்முத்தி காணாதவர்கள்"

ஆகின்றனர்.

இனி, 'காண்பான் முதலிய மூன்றும் பெத்தநிலை போலவே முத்தநிலையிலும் ஆன்மாவால் அறியப்பட்டு நிற்கும்' எனின் முற்கூறியவாறு சிவத்திலேயே அழுந்திநிற்கும் நிலை இல்லாமற் போய்விடும். அதனால்தான்,

" —காண்பானுங்
காட்டுவதுங் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர்"

ஆகின்றனர். இத்தகைய நிலைதான் சித்தாந்த முத்தி. ஏனைய எல்லாம், மாயாவாத முத்தி, பேதவாத சிவசமவாத முத்தி முதலியனவாம்.

" காண்பதும்பொய் கேட்பதும்பொய் காரியம்போ லேயிது ... ப்
பூண்பதும்பொய் எவ்விடத்தும் போகமும் பொய் ... த்
தோற்றிஇன்ப வெள்ளமாய்த் துன்னிஎன்னுட சம்பந்தல
வீற்றிருப்ப தொன்றுமே மெய் "

என்ற சிவபோகசாரம், இங்கு நினைவுகூர்தற்கு உரியது.

சித்தாந்த முத்திநிலையை நிச்சயித்துக் கூறுதற்காகவே, எங்கள் குருஞானசம்பந்தர், 'முத்தி நிச்சயம்' என்னும் நூலை அருளியுள்ளார்கள். அதனை அவர்கள் தொடங்கும் பொழுதே

" சந்தான நற்குரவர் தக்கோர் பிறர்சமயம்
நந்தாது தோற்றுவித்து நற்குரவர் முந்தவே
எந்தமுத்தி சித்தாந்தம் என்றார்கள் சைவத்தில்
அந்தமுத்தி நிச்சயிப்பேம் யாம் "

என்று தொடங்கியிருக்கின்றார்கள். பிற்காலத்தில் தோன்றிய 'ஆன்மானந்த வாதம்' என்றதை விலக்கி, உண்மைமுத்தியை அருளுதற்காகவே இந்நூல் அருளிச் செய்யப்பெற்றது இதற்கு இவ்வாதீனத்து வெள்ளியம்பலவாண முனிவர் வகுத்த மாபாடியத்தை உணர்வோர் சித்தாந்த நுணுக்கங்கள் பலவற்றை அறிவர். சித்தாந்த பரமுத்தியாகிய பேரின்ப நிலையில் திரிபுடி தோன்றுதொழிதலை,

" மா... டபலம் எங்கே மறைந்ததோ மாயைதனில்
ஆயசகம் எங்கே அழிந்ததோ - காயமதில்
நகும் புருடன் எங்கோ சச்சிதா னந்தவெள்ளம்
எங்கும் மிகக்கோத்த தே "

என்றும், 'திரிபுடி ஞானம் உள்ளவரையிலும் பேரின்பநிலை கைகூடாது' என்பதை,

" செறியுந் தனுவாதி சேர்ந்தறிந்து நின்ற
அறிவை அறிவால் அறிந்தே - அறிவிழந்து
நின்றால் சுகானந்தம் நீடும் நிலைவேறு
சென்றால் சுகம்கிடையா தே "

என்றும் அவர்கள் தமது சிவபோகசாரத்தில் அருளிச்செய்துள்ளார்கள். முத்திநிச்சயத்தில் முடிவாக,

" உள்ள மலம்நீங்கி ஓங்கு சிவானந்த
வெள்ளம் திளைத்ததுவாய் மேவுதலே - கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேறு "

என்று அருளினார்கள்.

௨ இங்ஙனம் அரிய பொருளாகிய முத்தி நிலையையே இவ் விரு வெண்பாவில் உமாபதி சிவாசாரியர் சிந்தனை முகத்தால் விளங்க வைத்துள்ளார்.

மற்றும், 'இருளும் ஒளியும் ஓரிடத்தில் இருப்பதில்லை; ஆகையால் ஆணவமும் இறைவனும் உயிரிடத்தில் பொருந்தி யிருத்தல் எவ்வாறு?'

'கருவி கரணங்கள் உள்ள பொழுது அவற்றால் வரும் மயக்க உணர்வே ஆன்மாவுக்கு உண்டாகும்; கருவி கரணங்கள் நீங்கினால் ஆன்மாவுக்கு அறிவே நிகழாது. ஆயின், திருவருளை அது பெறுவது எப்படி?'

'அசத்தாகிய கருவி கரணங்களைக் கொண்டே ஆன்மா அறிவை அடைகிறது; ஆகையால், அந்த அறிவினால் அறியப் படுபவை எல்லாம் அசத்துக்களேயாகும். அவ்வாறாக, இறைவனது திருவருளை ஆன்மா அறியுமாறு எவ்வாறு?'

'இருமலம் உடைய பிரளயாகலருக்கு மாயை இல்லை என்பதனால், அவர்கட்கு உடம்பு எங்கிருந்து வந்தது? உடம்பு இல்லாத பொழுது அவர்கள் வினையை ஈட்டுவதோ நுகர்வதோ இயலுமா? இயலவில்லை என்றால், அவர்களைக் கன்ம மலம் உடையவர்கள் என்பது எப்படி?'

'கன்மமும், மாயையும் ஆணவத்தை நீக்குதற்கே அமைந்தன எனப்படுகின்றன. அவ்வாறாயின், ஒருமலமே உடைய விஞ்ஞானகலர்க்கு ஆணவம் நீங்குதல் எவ்வாறு?'

இவைபோன்ற இடர்ப்பாடான வினாக்கள் பலவற்றையும் இந்நூலில் கண்டு சிந்தனை செய்தால், சித்தாந்த ஞானம் தெளிவுற விளங்குவதாகும். அவற்றை இந்நூலினால் அங்ஙனம் உணர்ந்து, அனைவரும் பயன் எய்துவார்களாக.

---

# இலங்கை வானொலியின் விமர்சனம்

## திருப்பெருமணநல்லூர்த் தேவாரத் திருப்பதிகங்களும் திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழும்

திருப்பெருமான நல்லூர் என்னும் திருத்தலமனாது திரு நல்லூர்ப் பெருமணம் எனவும் வழங்கும். இது சோழ நாட்டில், காவிரி நதியின் வடகரையில், தேவாரப் பாடல்பெற்ற அறுபத்து மூன்று திருத்தலங்களுள் ஐந்தாவதாகக் கருதபட்டு வருவது. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் காதலியைக் கைப்பற்றிக்கொண்டு சோதியுட் புகுந்து, சிவபெருமான் திருவடி நிழலை அடைந்த தனிப்பெருமைவாய்ந்தது. இங்குள்ள இறைவா, 'சிவலோகத் தியாகர்' எனப்படுவர். அம்மையோ 'திருவெண்ணீற்றுமை எனப்படுவாள்.' ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது திருவுளப்பாங்கின்படி, இத் திருக்கோயிலின் திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டபின், இப்பொழுது, அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அம் மகா கும்பாபிஷேக விழா மலராகவே இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இத் திருத்தலத்திற்குத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகங்கள் இரண்டு உள்ளன. அவையிரண்டும், பாராயணஞ் செய்வோர்க்கெல்லாம் எளியனவாகும் வகையில் பெரிய தடித்த எழுத்துக்களில் இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுக்கு, அரிய பொழிப்புரையும் சேர்க்கப்பட்டிருப்பதால் பாராயணஞ் செய்வோர் இலகுவாக விளங்கிக் கொள்ள இயல்வதாகும். அத் திருப்பதிகங்களுடன், திருவெண்ணீற்றுமைமீது திரிசிரபுரம் மகாவித்துவான் மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய பிள்ளைத்தமிழும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இங்ஙனமாகச் சிறப்பு வாய்ந்த-தெய்வம் மணக்கும் திருமலரை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வெளியிடுமாறு பணித்தருளியமைக்காக அவர்களுக்குத் திசை நோக்கி வணக்கம் செலுத்துவோமாக. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மேற்கொள்ளும் பிற பணிகளும் ஓங்குக எனத்தடங் கருணைப் பெருங்கடலை வந்தித்து வாழ்த்துவோமாக.

சைவ நன்மக்கள் எல்லோரும் பெற்றுப் பாராயணஞ் செய்ய வேண்டியது இந்நூல். பெற்றுப் பாராயணஞ் செய்வார்களாக விலை 60 நயே பைசா.

கிடைக்குமிடம் :—

தருமையாதீனம், தருமபுரம்,
மாயூரம் போஸ்ட், தஞ்சை மாவட்டம்,
தென் இந்தியா.

# சிவக்ஷேத்திர சிவநாமக்கலி வெண்பா

உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா என்றநூல் தருமையாதீனத்து 549வது வெளியீடாகும். இது ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூசை விழா மலராக வெளிவந்துள்ளது.

மூவரால் பாடப்பெற்ற சிவத்தலங்கள் 274. ஞானசம்பந்தர் முதலிய மூவரும் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் தோறும் யாத்திரைசெய்து திருப்பதிகங்கள் பாடினர். நாவுக்கரசர் திருக் கயிலை யாத்திரையில் வடநாட்டுத் தலங்களைத் தரிசித்து அருட் பாடல்கள் பாடியருளினர். சம்பந்தரும் சுந்தரரும் தமிழ்நாட்டில் இருந்துகொண்டே பிற தலங்களை ஞானக் கண்களால் கண்டு பதிகம் பாடினர். மணிவாசகப் பெருமான் கீர்த்தித் திருவகவ வில் சிறப்பாகப் பல தலங்களின் பெருமைகளைக் குறிப்பிட்டுள் ளார். இவ்வாறு சமயகுரவர்கள் நால்வர்களாலும் பாடப்பெற்ற தலங்களின் சிறப்பையும் பெருமையையும் உமாபதி சிவாசாரியார் செய்த சிவக்ஷேத்திரக் கலிவெண்பா குறிப்பிடுகின்றது. அத் தலங்களில் சிவபெருமான் அம்பிகையுடன் பற்பல திருப்பெயர் கள் கொண்டு எழுந்தருளியுள்ளார் அத்திருப்பெயர்களைச் சொல்லிப் போற்றுபவர்கள் இம்மை மறுமைகளில் சகலபோக பாக்கியங்களையும், முடிவில் நிலையான திருவடிப்பேற்றினையும் பெறுவதற்கு அப்பெருமான் இன்னருள் செய்வான் என்பதை உமாபதி சிவாசாரியார் இந்நூலில் குறிப்பிடுகின்றார்.

> "நின் அன்பருக்கு நிகழுமெண் சித்தியொடு
> பன்னலமும் மெய்யன்பும் பாக்கியமும் - மன்னவென்று
> நந்தாது ஒளிர் நித்தியானந்த நல்வாழ்வும்
> தந்தருள் உன் தாளே சரண்."

என்று சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா குறிப்பிடுகின்றது.

சில தலங்களில் சுவாமியின் பெயர் அம்மை பெயர்கள் இப் பொழுது மாறியுள்ளமையால் அடிக்குறிப்பில் பாட்டில் உள்ளபடி அப்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரிய நூலொன்றை வெளியிட அருளிய ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்களது கருணைத் திறத்திற்கு சைவ உலகம் என்றும் நன்றியும் கடப் பாடும் உடையதாகும்.

இந்நூலினைத் தருமையாதீனத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை குறிப்பிடப்படவில்லை.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.
திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 23. இதழ் 8, பக்கம் 472 இன் தொடர்ச்சி )

## இறைவன் உலகத்தைச் செயற்படுத்தும் முறை

மாணாக்கன் : எல்லாப் பொருள்களிலும் ஒன்றாய் வேறாய் உடனாய்க் கலந்து நிற்கும் இறைவன், அவற்றை இன்ன முறையில் செயற்படுத்துகின்றான் என்பது விளங்கவில்லை; அஃதாவது, உலகம் ஒருபடித்தாய்ப் பல்வேறு வகையாய்க் காணப் படுகின்றன.

அறிவுடை யுலகமாகிய உயிர்கள் ஓர் இனத்தவாய் இல்லாமல், 'மக்கள், பறவை, விலங்கு, தாவரம்' என்றாற்போலப் பல்வேறு இனத்தவாயும், ஓர் இனத்துக்குள்ளே, உயர்ந்தோர் - தாழ்ந்தோர், நிரம்பிய உறுப்பினர் - உறுப்புக் குறைந்தவர்கள், செல்வர்-வறியவர், கருடன்-ஊர்க்குருவி, புலி-மான், பசு-எருமை-புல் - மரம்' என்று இவ்வாறு எத்துணையோ வேறுபாடுகளை உடையனவாயும், அவற்றால் உறவும் - பகையும், வாழ்வும் - தாழ்வும், இன்பமும் - துன்பமும், சிறிதுகாலம் வாழ்வனவும் - நெடுங்காலம் வாழ்வனவும், வாழ்தற்குரிய காலம் முழுதும் வாழாது இடையிலே அழிவனவுமாய் இங்ஙனம் பல படியாகக் காணப் படுகின்றன.

அறிவில்லாத உலகமாகிய சடப்பொருள்களும், 'மண்ணுலகம் - பொன்னுலகம், ஒளியுலகம் - இருளுலகம், காடு - நாடு, மாலை - மடு' என்று இங்ஙனம் பலதிறப்பட்டனவாகவே காணப் படுகின்றன. ஆகவே, இவற்றை ஆக்கியும், காத்தும், அழித்தும் நடாத்துகின்ற இறைவன், எந்த ஒழுங்கின்மேல் இவைகளை இவ்வாறெல்லாம் செய்கின்றான்? அல்லது யாதோர் ஒழுங்கும் இன்றித் தன் மனம்போனவாறு செய்கின்றானா? ஒழுங்கற்ற நிலையில் தன் மனம்போனபடி செய்வானாயின், அதனால் என்ன பயனை, யார் பெறமுடியும்? அன்றியும் ஒழுங்கின்றிச் செய்தல்

பித்துக்கொண்டவர் முதலியோரது செய்கைபோல இகழ்ச்சிக் குரியதாமன்றி, அறிவுடையவனது செயலாய்ப் புகழ்ச்சிக்கு உரியதாதல் எப்படி? இவ்வையங்களைத் தீர்த்தருளுதல் வேண்டும்.

ஆசிரியர்: நன்றே வினவினாய்! பேரறிவும், பேராற்றலும், பெருங்கருணையும் உடையவனாகிய இறைவனது செயல் பித்தர் முதலியோரது செயல்போல யாதோர் ஒழுங்கும் இன்றியோ நிகழும்! எஞ்ஞான்றும் எவ்வாற்றானும் சிறிதும் பிறழாத ஒழுங்கிலேதான் அது நடைபெறுகின்றது; அவ்வொழுங்கு முறையே, 'வினை' அல்லது 'கன்மம்' எனப்படுகின்றது.

மாணாக்கன்: 'வினை' என்பதன் வழியே இறைவன் தனது செயல்களைச் செய்கின்றான் எனின், வினையே தலைவனாய்விடும்; ஏனெனில், தன் இச்சைப்படி நடத்தவும், நடக்கவும் மாட்டாது, பிறர் வழிப்பட்டு நடப்பவன் தலைவனாகான் ஆதலின்.

ஆசிரியர்: அறியாது கூறினாய்: இறைவன் தனது செயல்களை வினையின்வழியே செய்வது, வினையின் ஆற்றலைக் கடந்து தன் இச்சைவழி நடக்கமாட்டாமையால் அன்று; மற்று, அங்ஙனம் நடப்பின், பல்லுயிர்கட்கும் பயன் உண்டாதல் கருதியேயாம்.

செங்கோல் அரசர்கள் தங்கள் செயலை அரசியல் முறைப்படியே நடத்துதல், அதனைக் கடக்க முடியாமையால் அன்று; அங்ஙனம் நடத்துதலால் குடிகளுக்கு நலம் விளைதல் கருதியேயாம். அதுபோலவேதான், கடவுள் தனது செயலை வினையின் வழியே நடத்துவதும். ஆகவே, அரசனைத் தலைவனாக நினையாது, அரசியல் முறையைத் தலைவனாக நீ நினைப்பதாயின், கடவுளைத் தலைவனாக நினையாது, வினையைத் தலைவனாக நினைத்துக்கொள்.

மாணாக்கன்: ஆம்! அடிகள் அருளுவது உண்மையே; அடியேனது அறியாமைக்கு வருந்துகிறேன். அது நிற்க.

உயிர்கள் உடம்பைக் கொண்டுதானே வினையைச் செய்தல் கூடும்! உடம்பு இல்லாதபொழுது அவைகட்கு வினை ஏது? வினை இல்லாத பொழுது அதனதன் வினைக்கேற்ப உடம்புகளையும், பிறவற்றையும் வேறுவேறு வகையாக இறைவன் படைத்துக் கொடுத்தல் எவ்வாறு?

(தொடரும்)

தருமையாதீனம் வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி தேவஸ்தானம்
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில்



சென்னை மாநில ஆளுநர் அவர்கட்குப் பிரசாதம் வழங்குதல்.

தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலயத்தில்



ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள் தலைமையில்
உயர்நீதிமன்ற நீதிபதி. கனம். R. சதாசிவம் வெளியீட்டுரை நிகழ்த்துதல்.

# தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

(மலர் 23, இதழ் 8, பக்கம் 450 இன் தொடர்ச்சி)

வானத்து வெள்ளிமீன் தனக்குரிய திசையினின்றும் பெயர்ந்து தெற்கே செல்லின், மழை பொய்த்து நீர்வளம் அற்று விடும் என்பது ஞானத்துப் பெரியோர் கருத்து. ஆனால் அந் நிலையிலும் கூடக் காவிரி நீர்வளம் அருது பரந்து செழிப்புண் டாக்கும் என்பதைக் கவிஞர் பலர் எடுத்துரைக்கின்றனர்.

"வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கே கினும்
தற் பாடிய தளி யுணவிற்
புள் தேம்பப் புயன் மாறி
வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைய கடற் காவிரி" (பட்டினப்பாலை. 1-6)

என்று கூறுகிறார் கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

"அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர் பூட்ட" (புறம். 35.)

'ஞாயிறு நாற்றிசை தோன்றிற்று? நடுக்கம் வேண்டாம். வெள்ளி தென்புலம் படர்ந்ததா? விடுங்கள் கவலையை. அழகும் குளிர்ச்சியும் அமைந்த காவிரி நீர் அருது பலகாலாய் ஓடி வள மூட்டும்' என உறுதியூட்டுகிறார் வெள்ளைக்குடி நாகனார்.

"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்"

(நாடுகாண்காதை)

காவிரி பொய்யாது கடுகி வருதலை இளங்கோ எடுத்துரைக்கிறார்.

கோள் திரியினும், புனல்பரக்கும் கோள் திரியாக்காவிரியைக்,

"கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை"

எனச் சிறப்பிக்கிறது மணிமேகலையின் பதிகம்.

வான் பிழைப்பினும் தான் பிழையாப் பொன்னி, கரும்பு நெருங்கி வளரும் கழனிகளை உடைய நாடு வளம் சிறக்க, உலகம் உயர்வு பெறக் குணகடல் நோக்கி ஒழுகுகிறது.

"கரும்பமல் கழனிய நாடுவளம் பொழிய
வளங்கெழு சிறப்பின் உலகம் புரைஇச்
செங்குணக் கொழுகும் கலுழி மலர்நிறைக்
காவிரி" (பதிற்றுப்பத்து. 50)

சோழநாட்டைப் புனல்பரந்து வளங்கொழிக்கச் செய்யும் காவிரியைக் கண்ட கோவூர் கிழாருக்குக் குழந்தையைப் பாலூட்டி வளர்க்கும் தாய்தான் நினைவிற்கு வருகிறாள்.

"புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி மரங்கொல் மலிர்நீர்
மன்பதை சுரக்கும்" (புறம். 68)

தாயுடன் உவமிக்கும் அளவிற்குப் புனல் பரந்து பேணும் காவிரியின் தகைமைதான் என்னே!

எந்நதிக்கும் இல்லாத பெருமை "தமிழ்வையை" என்று அழைக்கப்படுவதால், மீன் பறக்கும் நாட்டை ஊண் சிறக்கும் நாடாக்கும் வையை நதிக்குக் கிடைத்திருக்கிறது. இதனை ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், "மலிபுகழ் வையை" என்றும், இளங்கோவடிகள், "உரவுநீர் வையை; நீடுநீர் வையை" என்றும் போற்றுகின்றனர்.

மாடம் சிறக்கும் கூடல்மாநகரின் வாயிலைக் காணுகின்றார் மாங்குடி மருதனார். ஆ! எவ்வளவு பெரிய வாயில். மாவும் மாந்தரும் இடையறாது அன்றோ போய்வருகின்றனர். இப்பெருமையை எடுத்துரைக்க அவருக்குக் கிடைத்த உவமை என்ன தெரியுமா? வையை.

" வையை அன்ன வழக்குடை வாயில் "

( மதுரைக்காஞ்சி. 354 )

இன்னும் கூறுகிறார்.

" இயங்குபுனல் கொழித்த வெண்டலைக் குவவுமணல்
கான்பொழில் தழீஇய அடைகரை தோறும்
தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையின் ஒழுகும் விரிநீர் நல்வரல்
அவிரறல் வையை " ( மதுரைக்காஞ்சி. 336-40 )

உலகின் பசி முதலாலும் துன்பங்கள் ஒழிந்திட வையை ஓடி வருகிறது என்பதை,

" நிலவரை அல்லல் நிழத்த விரிந்த
பலவுறு போர்வைப் படுமணல் மூஉய்
வரியரி யாணும் முகிழ்விரி இளைய
மாந்தீந் தளிரொடு வாழையிலை மயக்கி "

( பரிபாடல். 10 )

என்னும் அடிகளால் அறியலாம்.

இவ்வாறு பாவலர் நாவில் இசைபெற்று விளங்குகிறது வையை. பரிபாடலில் மட்டும் எட்டுக்கும் மேலான பாடல்கள் வையைபற்றியன. இப்பெருமை காரணமாகத்தான் இளங்கோவடிகள்,

" உலகு புறந்தூட்டும் உயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்னும் பொய்யாக் குலக்கொடி "

( புறஞ்சேரியிறுத்தகாதை. 168-70 )

எனக் கொண்டாடுகிறார். கலித்தொகையில் மருதனிள நாகனாரும்,

" கார்முற்றி இணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி இருநிலம்
தார்முற்றியது போலத் தகைபூத்த வையை "

( மருதக்கலி. 2 )

என்று குறிக்கின்றார். கார்காலம் வந்து வேரூன்றிக் கிளைத்து விட்டது. மலர்ந்து மணம் வீசுகின்றன பூங்கொத்துக்கள். அம் மலர்களைப் புனைந்து சிறப்போடு இப்புலவர்தம் கவிதை பெற்று ஊரைச் சூழ்ந்து வருகிறது வையை. பெருநில மடந்தை நறுமலர் மாலை சூடிக் கொண்டிருக்கும் தன்மையால் அழகுடன் பொலிவு பெற்று விளங்குகிறதாம் அவ்வாறு.

"பொய்யாதொழுகும்; பாண்டிநாட்டில் வளம் பொறுதச் செய்யும்" என்றெல்லாம் புலவர் பாடிவிட்டனர். புலவர் கூறிய வண்ணமே என்றும் வையை பொய்யாது ஓடுகிறது. "புலவர் சொல் உண்மை; பொய்யில்லை" என்று நாட்ட முனைந்ததாலல்லவா பொய்யாதொழுகி வினை இனிது நடைபெறச் செய்கிறது.

"மாசில் பனுவல் புலவர் புகழ்பல
நாவிற் புனைந்த நன்கவிதை மாறுமை
வேலிப் பரந்து வினைநந்த" (பரிபாடல். 6)

சேரநாட்டை ஈரநாடாக்கும் ஆன்பொருநை, குளிர்ச்சி மிக உடையதாகலான், செந்நாப்புலவரால் "தண்ணான் பொருநை" என்று பலவிடத்தும் பேசப்படுகிறது.

"குறுந்தொடிமகளிர்,
பொலஞ்செய் கழங்கின் தெற்றியாடும்
தண்ணான் பொருநை" (புறம். 36)

என்று ஆலத்தூர்க் கிழாரும்,

"தெண்ணீர் உயர்கரைக் குவைஇய
தண்ணான் பொருநை" (அகம். 93)

என்று மதுரை கணக்காயர் மகனார் நக்கீரரும்,

"நின்வாணாட்கள்,
தண்ணான் பொருநை மணலினும் சிறக்க"

என்று இளங்கோவடிகளும் பாடியுள்ளனர்.

பொருநையும் அதன்கரை அமைந்த புகழ் வஞ்சியும் பல விடங்களில் ஒருங்கே பேசப்படுகின்றன.

"மடமங்கையர்,
வரிமணற் புனை பாவைக்குக்
குலவுச் சினைப் பூக் கொய்து
தண் பொருநை புனல் பாயும்
விண் பொருபுகழ் விறல் வஞ்சி" (புறம். 11)

"வஞ்சிப் புறமதில் அலைக்கும்
கல்லென் பொருநை" (புறம். 387)

"வருபுனல் நீரான் பொருநை
சூழ்தரும் வஞ்சி" (சிலம்பு. வாழ்த்துக்காதை)

இதுகாறும், தமிழக எல்லையும், மூப்புலப்பாங்கும், நதிகள் திறமும் ஒருவாறு கண்டோம். இனி, தமிழகத்து இயற்கை வளனைக் கண்டு இன்புறுவோம்.

(தொடரும்)


குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமாரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 23, இதழ் , 8 பக்கம் 452 இன் தொடர்ச்சி )

## 1. முன்னுரை:-

சொற்களைப் பெயர், வினை, இடை, உரியென நான்காகப் பகுத்து அவற்றுள் பெயரது இலக்கணத்தைப் பெயரியலில் கூறினார். அதனையடுத்து வினையது இலக்கணத்தை இவ்வியலில் கூறுகின்றார். ஆதலின் அதனோடு இது இயைபுடைத்தாயிற்று.

## 2. வினைச்சொல்லின் இலக்கணமும். அதனது பாகுபாடும்:

வினைச்சொல் வேற்றுமையுருபுகளை ஏற்காது இறப்பு, நிகழ்வு. எதிர்வு என்னும் மூன்று காலத்தையும் பொருந்தி வரும் இயல்பினது. இது தெரிநிலை வினை, குறிப்பு வினையென இரு வகைப்படும். காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலைவினையாம்; அதனைக் குறிப்பாகக் காட்டுவது குறிப்பு வினையாம். அவ்வினைச்சொல் உயர்திணை, அஃறிணை, விரவுத் திணை என முத்திணையிலும் வரும் (1முதல் 4).

## 3. உயர்திணை :-

### (அ) உயர்திணைக்குரிய தெரிநிலைவினை :

இத்திணைக்குரிய வினைகளைத் தன்மை, படர்க்கையென இரு வகையாகப் பிரித்துக் கூறுவர். முன்னிலைவினை விரவுத்திணைக்கு உரியதாதலின் ஈண்டுக் கூறப்பட்டிலது.

(1) தன்மை யொருமை வினைமுற்று: கு, டு, து, று, என், ஏன், அல் ஆகிய ஏழு ஈறுகளும் இதற்கு உரியவாம் (6).

வினைமுற்றுக்கள் பெயரையே கொண்டு முடியும். அங்ஙன மன்றி வினையைக் கொள்ளுமேல் எச்சமாக நிற்கும். இதுவே எல்லா முற்றுக்களுக்கும் உரிய இயல்பாம். எனினும் இதற்கு விதி விலக்காக மூன்று வினைமுற்றுக்கள் உள. அவை செய்கு, செய்கும், மார் என்பன. இவற்றுள் செய்கென் கிளவி வினையொடு முடிதலை,

" அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர் " (வினை - 7)

என்னும் நூற்பாவானும், செய்கும் என்பது வினையொடு முடி தலைச் சேனாவரையர் உரையானும், மார் என்பது வினையொடு முடிதலை,

"மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப" (வினை - 10)

என்னும் நூற்பாவானும் அறியலாம். நன்னூலாரும்,

" செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே" (வினை-14)

" ஆர்ஆர் பவ்வூ ரகமா ரீற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே"(வினை 8)

எனக் கூறுமாறு காண்க.

மேற்கூறிய தன்மை யொருமை வினைமுற்றுக்குரிய ஈறுகளுள் 'கு' என்பதை இறுதியாகவுடைய 'செய்கு' என்னும் வாய்பாட்டுச் சொல் வினையொடு முடியினும் முற்றென்றே பெயர் பெறும். (எ-டு) 'காண்கு வந்தேன்' எனவரும்.

செய்கு, செய்கும், மார் என்பன வினையொடு முடியின் எச்ச மாதற்கும் உரிய காரணத்தைச் சேனாவரையர் நன்கு விளக்கு கிறார். அதுவருமாறு:-

(1) காண்குவந்தேன் என்பதில் காண்கு என்பது செய்கென் எச்சமாகும். இது காணவந்தேன் என எதிர்காலப் பொருளை உணர்த்தும். இது வினைமுதல் வினையே கொண்டு

முடியும். இது வந்தேன் என்னும் வினைகொண்டு முடிந்தமையின் எச்சமாயிற்றெனின், காணவந்தேன் எனச் செயவெனெச்சமாகவே திரிக்க வேண்டும். காண்கு என்பதைக் காண எனத்திரிப்பதில் காலவழு இல்லையேனும் காண்டு என்பது தன்வினைமுதல் வினையே கொண்டு முடிய காண என்பது தன்வினைமுதல்வினையும் பிறவினையும் கொண்டு முடிதலின் வழுவாம். இதனை வேறுவகையாகத் திரித்தற்கும் இயலாது. ஆதலின் இது முற்றென்றே பெயர்பெறும்.

(2) ஏனைய முற்றுக்களெல்லாம் பெயர் கொண்டு முடிதல் பெரும்பான்மையாதலின், வினைகொண்டு முடியின் எச்சமாயிற்றென்றனர். ஆனால் செய்கென் கிளவி முதலியனவோ வினை கொண்டு முடிதலே பெரும்பான்மையாதலின் அதனையே இலக்கணமாகக் கொண்டு முற்றென்றே கருதினர்.

(3) அகத்தியனாரும்,

"முற்றுச் சொற்றும் வினையொடு முடியினும்
முற்றுச்சொ லென்று முறைமையிற் றிரியா"

என நூற்பா யாத்ததும் இக்கருத்தினையே வலியுறுத்தும்.

சங்கர நமச்சிவாயர் மேற்கூறிய காரணத்தையெல்லாம் தழுவாது, இவை வினையொடு முடியினும் முற்றாதற்குக் காரணம் மரபே என்பர். (7).

(2) தன்மைப் பன்மை வினைமுற்று: இது தனித்தன்மையும் பன்மைத் தன்மையுமென இருவகைப்படும். தன்னைமட்டும் உணர்த்தி வருவது தனித்தன்மையாம்; தன்னொடு பிறரையும் உளப்படுத்திப் பேசுவது பன்மைத் தன்மையாம். பன்மைத் தன்மை யெனினும், தன்மைப் பன்மை யெனினும், உளப்பாட்டுத் தன்மை யெனினும் ஒக்கும். இவற்றுக்குரிய ஈறுகள்; அம், ஆம். எம், ஏம், கும், டும், தும், றும் என்பன. இவற்றுள் அம் ஆம் என்பன தன்னொடு முன்னிலையாரையும் தமராயவழித் தன்னொடு படர்க்கையாரையும், எம், ஏம் என்பன தன்னொடு படர்க்கையாரையும், கும் டும் தும் றும் என்பன தன்னொடு முன்னிலையாரையும் அல்லது தன்னொடு படர்க்கையாரையும் அல்லது அவ்விருதிறத்தாரையும் ஒருங்கு உளப்படுத்தற்குரியவாம். இதனையே நன்னூலாரும்,

“ அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்
உம்மூர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை ”

எனக் கூறுமாறு காண்க (5)

தன்மைப் பன்மைச்சொல் உயர்திணைக்கே உரியது. ஆயி னும் அது ‘யானும் என் எஃகமும் சாறும்’ என எண்ணுமிடத்து அஃறிணையை உளப்படுத்தி வருதலும் உண்டு (12).

(3) படர்க்கையொருமை: அன், ஆன், அள், ஆள், ஆகிய நான்கு ஈறுகளும் இதற்கு உரியவாம் (8).

(4) படர்க்கைப் பன்மை: அர், ஆர், ப, மார் என்ற நான்கு ஈறுகளும் இதற்கு உரியவாம் (9, 10).

இங்குக் கூறப்பட்ட படர்க்கை ஈறுகள் எட்டும் கிளவியாக்கத் துள் கூறப்பட்டனவே. ஆண்டுக் கூறிய ன், ள், ர் என்பனவே ஈண்டு முறையே அன், ஆன், அள், ஆள், அர், ஆர் என்று யின. ஆண்டு இவ்வீறுகள் பாலுணர்த்துதற்குக் கூறப் பட்டன; ஈண்டு இடமுணர்த்துதற்குக் கூறப்பட்டன. இவ் வீரிடத்தும் கூறியதைத் தொகுத்தே நன்னூலாரும்.

“ அன் ஆன் இறுமொழி யாண்பாற் படர்க்கை ” (வினை : 6)

“ அள் ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கை ” (வினை : 7)

“ அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே ” (வினை : 8)

எனக் கூறுமாறு காண்க.

இதுகாறும் கூறப்பட்ட அம், ஆம், எம், ஏம், கும், டும், தும், றும், கு, டு, து, று, என், ஏன், அல், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், என்னும் இருபத்துமூன்று ஈறுகளும் உயர்திணைக்குரிய வினைமுற்றின் ஈறுகளாம். இங்ஙனம் தொகுத் துக் கூறுவதை ‘விரிந்தது தொகுத்தல்’ என்பர் நச்சினார்க் கினியர் (11).

(தொடரும்)

# பாடி காவல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ.

அப்பரடிகள் அருளிய அருந்தமிழ்ப் பாடல்களுள், கோடிகா என்ற சோழநாட்டுத்தலம் இடம் பெற்றுள்ளது. இத்திருத் தலத்திற்கு அப்பரடிகள் தம்முடைய சோழநாட்டு யாத்திரையின் போது வந்து வழிபட்டார். திருவாவடுதுறை வழிபாட்டிற்கு முதலில் இத்தல வழிபாடு நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்பது சேக்கிழார் திருவாக்கினால் அறியப்படுகின்றது. 'ஆவுறும் அஞ்சு ஆடுவார் கோடிகாவில், அணைந்து பணிந்து ஆவடு தண்டுறையைச் சார்ந்தார்' என்பது சேக்கிழார் திருவாக்கு. இக்கோடிகாவிற்கு வந்து வழிபட்டபோது அடிகள் அருளிய பதிகங்களுள் இப்போது நாம் பெற்றிருப்பவை மூன்றாகும். (1) நெற்றிமேற் கண்ணினானே" எனத் தொடங்கும் திருநேரிசை (2) "சங்குலா முன்கை" எனத் தொடங்கும் திருக்குறுந் தொகை, (3) "கண்டலஞ்சேர்" எனத் தொடங்கும் திருத் தாண்டகம் ஆகிய மூன்றும் இன்று கிடைத்திருப்பவை. இவற்றுள் திருக்குறுந்தொகையில் இரண்டு பாடல்களில், அடிகள் குறிக்கும் அழகிய கருத்தே இங்கு நம் சிந்தனைக்கு உரியதாக உள்ளது.

"நாள்தோறும் நீர் மாதர்பால் ஓடி, வாழ்வினையே நினைந்து வாடி வாழ்வது என் ஆவது? கோடிகா இறைவனைக் கூறிரேல், ஊர்க்காவலிற் பட்டுக் கழிவீர்" எனவும், "திருமாலும் நான்முகனும் தேவர்களும் ஆராய முற்பட்டுத் தேடித் துயர் உறவும் தெரியாத இயல்பை உடைய ஒப்பற்ற கோடிகாவுறையும் இறைவனைக் கூறாத நாட்களெல்லாம் ஊர்க்காவலிற் பட்டுக் கழியும்" எனவும் பொருள்பட அடிகள் பாடியுள்ள இரண்டு திருப்பாடல்கள் இப்பதிகத்தே உள்ளன.

"கோடி காவனைக் கூறீரேல் கூறினேன்
பாடி காவலிற் பட்டுக் கழிதிரே"

" கோடி காவனைக் கூறாத நாளெலாம்
பாடி காவலிற் பட்டுக் கழியுமே "

இதனுள் 'பாடிகாவல்' என்ற ஓர் அழகிய தொடரை அடிகள் அருளியுள்ள அருமைப்பாடு அறிந்து மகிழத் தக்க ஒன்றாகும். இந்தத் திருப்பாடல்களிலும், பாடி காவல் என்ற தொடரிலும் ஈடுபட்ட சிவஞான முனிவர் தம் பேருரையின்கண், இதற்கு உரை விரிப்பாராக, "நெறியின் வழீஇயினாரை, வழக்குவினாய், ஒப்பநாடிச் செய்யும் தண்டத் தொழில் உணர்த்துவதோர் சொல்" என்றெழுதி இத்திருப் பாடலை எடுத்தும் காட்டியுள்ள எழில் சைவ உலகு அறிந்து மகிழற்குரியதாக உள்ளது. "ஒரு நகரியைக் காப்பான் பாடி காவலிட்டாங்கு அவை அவனது ஆக்கினை யாகலான்" (சிவஞானபோதம் - சூத் - 2; அதி 2.) என்ற ஆசிரியர் மெய் கண்டார் திருவாக்கிலேயே இதனை நாம் காண்கின்றோம். மெய்கண்டாரும், சிவஞான முனிவரும் இக்கோடிகாப் பதிகத்திலும், குறிப்பாக இவ்வழகிய நறுந்தமிழ்த் தொடரிலும் ஈடுபட்டுள்ளமையை இம்மேற்கோள் ஆட்சிகள் விளக்கும்.

பாடி என்றசொல் ஊரைக்குறிக்கும்; இன்றும் இது வழக்கில் உள்ளது. தரங்கம்பாடி, ஆலத்தம்பாடி, காட்டுப்பாடி, மழபாடி ஆப்பாடி, முதலிய பல ஊர்கள் இன்றும் தமிழகத்தில் வழக்கில் உள்ளன. பெரும்பாலும் பாடி, பாக்கம், பட்டினம் என்பன வற்றுள் நெய்தல் நிலத்தூர்கள் முதற்கண் குறிக்கப்பெற்றன. பின் பொது நோக்கில் அவை ஆளப்பெற்றுவிட்டன. ஊரைக் காவல் புரிவது மன்னவர் கடனாக அன்றும், மக்கள் கடனாக இன்றும் உள்ளன. முடியரசு நிலவிய பழங்காலத்தில் மன்னவர் 'ஊர்க்கும் உலகிற்கும் ஓர் உயிர்' எனும்படி இருந்து காவல் புரிந்தனர். மகேந்திர வர்மப் பல்லவர், அப்பர் காலத்து வாழ்ந்த பல்லவப் பெருமன்னர். அம்மன்னர் காலத்தே வாழ்ந்த அடிகள் அவரது சமணச் சார்புநிலையில் அடைந்த துயரங்கள் பல. அவ்விடுக்கண் அனைத்திற்கும் நெஞ்சழியாது, திருவருளே பற்றாக உறுதியொடு வாழ்ந்த அடிகளுடைய உறைப்பு மன்னனையே மாற்றிவிட்டது என்பது வரலாறு. சைவநெறியின் கண் திரும்பிய மகேந்திரவர்மரது அன்புநெறியால் தமிழகம் அதன்பின் அடைந்த கலை நலங்களும் பிற நலங்களும் பல.

கோடிகா இறைவனை ஏத்தாவிட்டால், ஊர்க்காவலிற்பட்டு வாழ்நாள் கழியும் என்று அடிகள் கூறுவதன் கருத்து, வாழ் நாள் வீணே கழியும் என்று உரைப்பதே ஆகும். 'அரச

தண்டனை கிடைக்கும் ' என்று அச்சுறுத்துவது அவர் நோக்கம் அன்று எனலாம். ஏனெனில், அரச தண்டனைகள் அரனடியாரை என்ன செயலும் செய்து அடைய முடியாது என்பது அடிகள் அநுபவம். அன்றியும், மக்களை அன்பாக அழைத்து அன்பு நெறியில் ஆற்றுப்படுத்தும் அழகு அப்பரடிகட்கே உரிய தனி அழகு. ஆதலின், ' பாடிகாவல் போல, ஊரைக் காத்துக் கிடந்து ஒரு பயனும் பெறுதநிலை போல ஆகும் வழிபடாத நாட்கள் ' என்று அடிகள் அறிவுறுத்தக் கருதினுராதல் வேண்டும். பாடியைக் காத்து நின்று பயனின்றி வாணுளைக் கழியாது, கோடிகா வுறையும் குழகனை வழிபடுக என்று அழைக்கின்றுர் அடிகள். அன்றி, அரசநீதி பிழைத்தாரை அரசன் வழக்கு வினவி தண்டம் செய்தல்போல, இறைவனை வணங்கீராயின் அபராதம் (குற்றம்) விளையும் என்று உரைத்ததாகவும் கொள்ளலாம். ' அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும், நெஞ்சம் வாழி ' நினை நின்றியூரை நீ ' - என்று மற்றொரு தலத்தில் பாடியருளிய அடிகள் திருவாக்கும் இங்கு ஒப்பிட்டுணரத் தக்கது.

இவ்வாறு பல கருத்துக்களை விளைத்து, சான்றோர் பலர் சிந்தையைக் கவர்ந்துள்ளது. அடிகள் பாடியருளிய ' பாடிகாவல் ' என்ற தொடர் அமைப்பழகு.

---

## EXRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswami Devasthanam, Tirucadaiyur

1964ம் ஞூ ஜூன்மீ 12ம் தேதி எனது ஷஷ்டியப்தபூர்த்தி ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் அனுக்கிரகத்தாலும் ஷை ஆதீன சிப்பந்திகள் & அதிகாரிகள் உதவியாலும் மிக்க விமர்சையாக நடந்தது. நானும் என் உறவினர்களும் நல்ல முறையில் ஸ்வாமி தர்சனம் செய்ததோடு மிக்கச் சந்தோஷம் அடைந்தோம் இவைகளை நடத்த அனுக்கிரகம்செய்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒ-ம்.) A. R. அப்பாத்துரை பிள்ளை,
புலவனூர்.

# சம்பந்தசரணாலய சுவாமிகள்

## சரித்திரச் சுருக்கம்

திருக்கைலாய பரம்பரையில் விளங்காநின்ற தருமபுரவாதீனத்திலே ஆருவது குருமூர்த்திகளாக யெழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தசுவாமிகள் காலத்திலே, அவருடைய மாணாக்கர்களுள்ளே சிரேட்டராகிய சம்பந்தசரணாலய சுவாமிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வியறிவொழுக்கங்களாலும், குருலிங்க சங்கம பத்தியானும் மிகச் சிறந்தவர். தினந்தோறுந் தமக்குரிய நியதிகளை முடித்துக்கொண்டு நிஷ்டையிலிருப்பவர். இது நிற்க.

கன்னடம், தெலுங்கு, திராவிடம் முதலிய பாஷைகளில் அதிசமர்த்தரும், சுப்பிரமணியக்கடவுளிடத்து மிகுந்த பத்தியையுடையவரும், மைசூர் அரசருமாகிய கர்த்தர் என்பவர் சாஸ்திர விஷயமாயுள்ள சில சந்தேகங்களை வினவும் பொருட்டுப் பற்பல இடங்களிலுள்ள வித்துவான்களை அனுப்பும்படி அரசர்கட்கும் மடாதிபதிகட்கும் நிருபங்கள் விடுத்தார். இத் தருமபுரவாதீனத்திற்கும் அந்நிருபம் வந்தது. அதனைக் கண்டு எழுந்தருளிய மகாஞானியாகிய சம்பந்தசரணாலய சுவாமிகள் மைசூரையடைந்து, அரசர்சமுகத்தில் எழுந்தருளும்பொழுது, அவ்வரசர் ஏனைவித்துவான்களினும் பார்க்க இவரிடத்து ஆச்சிரமத்திற்கு ஏற்ற, காலோய்ந்த நடை உடை நிறம் குறி முதலியவை இருந்தபடியைக் கண்டு, தம்மருகிருந்தாரை நோக்கி, "இவர் ஒரு அண்டங்காக்கையோ?" என்றார். அதுகேட்ட சுவாமிகள் அவர் சமீபத்தை அடைந்து, "அது நானல்ல" என்று சொல்லி அதனால் அவருக்குண்டாகிய கோபத்தைக் கண்டு, மீட்டும் அவரை நோக்கி, "மகாராசாவே! நான் சொல்லியதை ஏதோ விகற்பமாய் நினைத்தீர்போலும்; அண்டத்தைக் காவல் செய்யுஞ் சக்தி உமக்கே அன்றி எனக்கு ஏது? ஆதலின் அவ்வாறு கூறினேன்" என்றார். உடனே அவர் அகமிகமகிழ்ந்து, அவரைத் தம் அருகிருத்தி, பற்பல வித்துவான்களையும் நோக்கி, தமது வினாக்களை நிகழ்த்தி அவைகளுக்கு இச் சுவாமிகள் சொல்லுஞ் சமாதானமே தமது புத்தியில் விசேஷமாய்த் தோன்றக்கண்டு, அவரொழிந்த வித்துவான்களை அவரவர் தகுதிக்கேற்ப உபசரித்தனுப்பினர்.

இந்தச் சுவாமிகள் அவ்வரசருடைய அநுமதியின்படி அவ்விடத்தில் வசிக்கும்போது அவராலனுப்பப்படும் பதார்த்தங்களைப் பிறர்கொள்ளத் தாம் அற்பமேனும் உபயோகியாது மாதுகரிபிக்ஷை பண்ணிக்கொண்டு, தம்மை அடைந்த அன்பர்கட்குக் கல்வியறிவொழுக்கங்களையுஞ் சமயத்தையும் போதித்து வந்தனர். அதனையுணர்ந்த அரசர் "எங்ஙனமாயினும் இம் மகாநுபாவர் எமது அன்னத்தைப் புசிக்கும்படி செய்யவேண்டும்" என்று எண்ணி, ஒருநாள் அவர் பிக்ஷையேற்கும் வீடுகள் தோறும் தமது பதார்த்தங்களை அனுப்பி அவருக்குத் திருவமுது செய்வித்தனர்.

பின்பு ஒருநாள், அவ்வரசர் புலவர் திலகராகிய சுவாமிகளை நோக்கி, "சுவாமீ! கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய கடல்போற் பரந்துகிடக்குங் கந்தபுராணத்தை யாவரும் எளிதின் வாசித்து உணரும் பொருட்டுச் சுருக்கிச் செய்து தரவேண்டும்" என்று கேட்க; சுவாமிகள் அவ்வாறே ஒரு சுபதினத்திலே பாடும்படி ஆரம்பித்து அற்புத சின்மய அதிமதுர கவியாகிய கந்தபுராணத்தைக் கந்தபுராணச் சுருக்கம் எனப் பெயர்தந்து பாடி முடித்து, அவ்வரசர் முதலாயினாரோடுந் திருச்செந்தூரை அடைந்து, முருகக்கடவுளுடைய சந்நிதியிலே அதனை அரங்கேற்றினர்.

அப்பொழுது, அவ்வரசர் மனமிக மகிழ்ந்து ஒரு பொற்றட்டிலே அனேகமாகிய நவரத்தினங்களை வைத்து, அவருக்குப் பரிசாகக் கொடுக்க; அவர் அதை ஏற்று, "இது குருவுக்குப் பிரீதியாகுக" என்று அப்பால் வைத்தார். மறித்தும் அவ்வாறே கொடுக்க, "இது சிவனுக்குப் பிரீதியாகுக" என்று அப்பால் வைத்தார். மறித்தும், அவ்வாறே கொடுக்க, "இது அடியார்களுக்குப் பிரீதியாகுக" என்று அப்பால் வைத்தார். அது கண்ட அரசர் "மும்முறையுந் தமக்கென்று நாங்கொடுத்ததை இவர் இப்படிச் செய்தாரே" என்று நினைக்கும்பொழுது சுவாமிகளுடைய அநுபவந் தெரிந்தாரிற் சிலர் அவ்வரசரை நோக்கி, "மகாராசாவே! இதுவரையில் இவர் தமக்கென்று நினைத்தது யாதாயினும் உண்டோ?" என்றார்கள். அதன்பின் அவ்வரசர் சுவாமிகளை நோக்கி, "சுவாமீ! அடியேன் தேவரீரை நகர்வலஞ் செய்வித்துத் தரிசிக்க விரும்புகின்றேன்" என்று விண்ணப்பஞ் செய்ய, அவர், "தருமபுரவாதீனத்தில் எழுந்தருளியிருக்கும் எனது குருமூர்த்திகளுடைய அநுமதியின்றி அதற்கு நான் இசையமாட்டேன்" என்றார். அதுகேட்ட அரசர் அவ்வாறே

தமது கருத்தை அவரது ஞானதேசிகருக்குத் தெரிவித்து, அவர் அநுமதி பெற்றுச் சுவாமிகளை நகர்வலஞ் செய்வித்தார்.

பின்பு ஒருநாள் சுவாமிகளை நோக்கித், "தங்கள் குருஸ்தானத்தில் வசிக்கும் பக்தகோடிகள் தினந்தோறுஞ் செய்யும் தொழில் என்னை?" என்று வினவ அப்பொழுது சுவாமிகள் இக் கட்டளைக்கலித்துறையைத் திருவாய் மலர்ந்தருளினர்.

ஆய்வார் பதிபசு பாசத்தி னுண்மையை யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுண் ஞானப்ரகா சன்மெய்த் தொண்டர்களே.

இதைக் கேட்டுணர்ந்த அரசர், "ஆண்டு வசிக்கும் அடியார்களுடைய தன்மையே இங்ஙனமாயின், அவ்வடியார்களை அடிமைகொள்ளுங் குருமூர்த்திகளுடைய பெருந்தகைமை எங்ஙனமாகும்" என்று அத்தியந்த ஆச்சரியம் அடைந்து, அவர் முன்னே குருலிங்க சங்கமங்களுக்கென்று வாங்கி வைத்த நவரத்தினங்களையும் அந்தஸ்தானத்திற்கே அனுப்பினர். அம்மட்டோ! குற்றமற்ற இலக்கணங்களையுடைய கோக்களைத் தானஞ்செய்தல் மிக மேலாகிய தருமமாதலால் மிகுந்த சிரத்தையோடு அவ்வாதீனத்திற்கு வருஷந்தோறும் பசுக்களுள் உயர்ந்த கபிலைகளை அனுப்புவதாகிய ஒரு வழ்க்கத்தையும் உண்டாக்கினர். அது நெடுநாள் வரையில் நடந்துவந்தது. அது நிற்க.

சம்பந்தசரணாலய சுவாமிகள் இப்படியே நெடுங்காலமாக யாத்திரைபண்ணித் தருமபுரத்தை அடைந்து, திரிகாலத்திலும் குருதரிசனஞ் செய்துகொண்டிருந்து, சிலகாலஞ் சென்றபின் சிவபதப்பிராப்தியானர்.

வேலுமயிலுந்துணை.

துய்யதா மறைகளாலுந் துதித்திட வரியதான
செய்யவே ளடிகள்வாழ்க சேவலு மயிலும்வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்கவன்னன்
பொய்யில்சீ ரடியார்வாழ்க வாழ்கவிப் புவனமெல்லாம்.

— கந்தபுராணச் சுருக்கம்

---

இவ் வரலாறு கந்தபுராணச்சுருக்கம் - ஆறுமுகநாவலர் பதிப்பில் உள்ளது.

## தாயுமான சுவாமிகள்

அருளிய

# மௌனகுரு வணக்கம்

ஆசைநிக ளத்தினை நிர்த்தூளி படவுதறி
யாங்கார முளையை யெற்றி
அத்துவித மதமாகி மதமாறு மாறுக
வங்கையின் விலாழியாக்கிப்
பாசவிரு டன்னிழ லெனச்சுளித் தார்த்துமேற்
பார்த்துப் பரந்தமனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக
படாமன்ன மாயைநூறித்
தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்
செங்கைக்கு ளேயடக்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்துநின்
றிருவருட் பூர்த்தியான
வாசமுறு சற்சார மீதென்னை யொருஞான
மத்தகஜ மெனவளர்த்தாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌனகுருவே. 1


ஐந்துவகை யாகின்ற பூதமுத னாதமு
மடங்கவெளி யாகவெளிசெய்
தறியாமை யறிவாதி பிரிவாக வறிவார்கள்
அறிவாக நின்றநிலையில்
சிந்தையற நில்லென்று சும்மா விருத்திமேற்
சின்மயா னந்தவெள்ளம்
தேக்கித் திளைத்துநா னதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன்றுகாண்
எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழவரு
ளியநந்தி மரபுவாழ்க
என்றடியர் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென்னவே
வந்தகுரு வேவீறு சிவஞான சித்திநெறி
மௌனோப தேசகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. 2

தருமையாதீனம் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்



சென்னை மாநில ஆளுநர் அவர்களைப் பூர்ணகும்ப
மரியாதையுடன் வரவேற்றல்.

அகில இந்திய காங்கிரஸ்தலைவர்
உயர்திரு. கு. காமராஜ் அவர்களது 62-வது பிறந்தநாள் விழாவில்
அவரது இல்லத்தில்



தருமையாதீனச்சார்பில் ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்
ஆதீன வெளியீட்டுப் புஸ்தகம் 62ம் பிரசாதமும் வழங்கி வாழ்த்துதல்.

ஆதிக்க நல்கினவ ரார்இந்த மாயைக்கெ
னறிவின்றி யிடமில்லையோ
அந்தரப் புஷ்பமுங் கானலின் னீருமோ
ரவசரத் துபயோகமோ
போதித்த நிலையையு மயக்குதே அபயநான்
புக்குவரு டோற்றிடாமல்
பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தியென்
புந்திக்கு ளிந்த்ரசாலஞ்
சாதிக்கு தேஇதனை வெல்லவு முபாயநீ
தந்தருள்வ தென்று புகல்வாய்
சண்மத ஸ்தாபனமும் வேதாந்த சித்தாந்த
சமரசநிர் வாகநிலையும்
மாதிக்கொ டண்டப் பரப்பெலா மறியவே
வந்தருளு ஞானகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. 3

மின்னனைய பொய்யுடலை நிலையென்று(ம்) மையிலகு
விழிகொண்டு மையல்பூட்டு
மின்னார்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட
மேல்வீடு சொர்க்கமென்றும்
பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றிஇப்
பொய்வேட மிகுதிகாட்டிப்
பொறையறிவு துறவீத லாதிநற் குணமெலாம்
போக்கிலே போகவிட்டுத்
தன்னிகரில் லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
தரணிமிசை லோகாயதன்
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
சமரச சிவானுபூதி
மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின்
வாழ்வித்த ஞானகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே. 4

(தொடரும்)

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 23, இதழ் 8, பக்கம் 460 இன் தொடர்ச்சி )

चतुर्खारिश्च भारं च खारिद्वौ संग्रहेत् घृतम् ।
प्रतिकालं हुनेद्विद्वा नुत्तमादि क्रमेणतु ॥ 383

ஒவ்வொரு கால ஹோமத்திலும், ஹோமம் செய்வதற்கு நெய்யின் அளவு உத்தம பக்ஷத்தில் நான்குகாரி நெய் வேண்டும். (ஒருகாரி என்பது நான்கு மரக்கால்) மத்தியம பக்ஷத்திற்கு ஒருபாரம் நெய் வேண்டும். (மூன்று காரி கொண்டது ஒருபாரம். அதாவது பனிரெண்டு மரக்கால்) அதம பக்ஷத்திற்கு இரண்டு காரியாகும்.

द्विपर्वैग्राहि तर्जन्या बिन्दुरित्यमिधीयते ।
बिन्दु षट्कंतु कर्षार्धं तद्युग्मं कर्षकंभवेत् ॥ 384

कर्षद्वयंतु मुष्टिस्स्यात् तद्वयं प्रसृतिर्भवेत् ।
तद्वयं कुडुपं प्रोक्तं तद्वयं धारणं भवेत् ॥ 385

धारण द्वितयं प्रस्थं द्वात्रिंशाहुति प्रस्थकम् ।
कर्षपूर्णं घृतेनैव एकाहुति मथाचरेत् ॥ 386

தர்ஜநி விரலின் இரண்டு பர்வாவினளவு நெய்யில் தோய்த்துத் தூக்கிய விரலிலிருந்து சொட்டும் சொட்டிற்கு பிந்து என்று பெயர், அந்த பிந்துவின் ஆறு கொண்டது, பாதி கர்ஷமாகும், பனிரெண்டு பிந்து ஒரு கர்ஷம் என்ற அளவு, இந்த கர்ஷத்தின் இரண்டு பங்கு கொண்டது முஷ்டி என்ற அளவாகும். அந்த முஷ்டியின் இரண்டு பங்கிற்கு ப்ரச்ருதி என்று பெயர். அந்த ப்ரச்ருதியின் இரண்டு பங்கிற்கு குடுபம் என்று பெயர், அவ்விரு குடுபம் கொண்டது ஒரு தாரணை,

அந்தத் தாரணையின் இரண்டு பங்கு ப்ரஸ்தம் எனப் பெயர் பெறும். இத்தகைய ஒரு ப்ரஸ்தத்திற்கு முப்பத்திரண்டு ஆகுதி யாகும். ஒரு ஆகுதிக்கு ஒருகர்ஷம் நெய் வேண்டும். கர்ஷ அளவினால் நிறைந்த நெய்யை சுருவத்தினால் ஹோமம் செய்ய வேண்டும். ஆகவே ஒருபடி நெய்யின் ஹோமம் முப்பத்திரண்டு ஆகுதியாகும். இவ்வாறு ஆஜ்ய ஹோமத்தின் அளவு கூறப் பட்டு இனி திரவிய ஹோமத்தின் அளவு கூறப்படுகிறது.

गुञ्जायावाऽथमाषस्य विंशतिर्धारणं भवेत ।
धारणाष्टौ पलं वाऽथ मुष्टिर्वाऽथ भवेदिह ॥ 387

उक्तान्यतर चातुष्कं कुडपं परिचक्षते ।
प्रसृती तच्चतुष्कं स्यात्तच्चतुष्कं तथाऽढकम् ॥ 388

இருபது குன்றுமணி அல்லது உளுந்து அளவு கொண்ட தற்கு தாரணம் என்பதாகும். எட்டு தாரணை கொண்டது, ஒருபலம் என்றோ அல்லது ஒருமுஷ்டி என்றோ ஆகிறது. இங்கு கூறப்பட்ட பலத்தினுடையவோ, முஷ்டியினுடையவோ நான்கு பங்குகொண்டது குடுபம் என்று கூறப்படுகிறது. அந்த குடுபத் தின் நான்கு பங்குகொண்டது ப்ரச்ருதி என்பதாகும். அந்த ப்ரச்ருதியின் நான்கு பங்குகொண்டது ஆடகம் எனப் பெயர் பெறும்.

नवधान्यानि सर्वाणि आढकेन पृथक् पृथक् ।
द्विप्रस्थं सर्षपं प्रोक्तं तिलमञ्जलि मात्रतः ॥ 389

एवमेव प्रकारेण प्रतिकालं हुनेत्क्रमात् ।
धृत द्रव्याहुतिःप्रोक्तः पञ्चपक्षमिहोच्यते ॥ 390

நவதான்யங்கள் யாவும் ஒரு ஆடகத்தின் அளவு ஹோமம் செய்யவேண்டும். ஆடகம் என்பது ஒருமரக்காலாகும். ஆனால் கடுகு இரண்டு படியும், எள் ஒரு அஞ்சலியளவும் ஹோமம் செய்யவேண்டும். (அஞ்சலி என்பது இரண்டு கைகளையும் சேர்த்து அள்ளி நின்ற தான்யத்தின் அளவு) இவ்வாறு ஒவ் வொரு காலம்தோறும், முறைப்படி நெய் திரவியங்கள் ஹோமம் செய்யவேண்டும் என்ற விதிமுறையைக் கூறி பஞ்சபக்ஷ குண்ட பூஜா ஹோம முறையானது கூறப்படுகிறது.

पूर्वे चाहवनीयाग्निर्दक्षिणाग्निस्तु दक्षिणे ।
पश्चिमे गार्हपत्याग्निः केवलाग्निस्तथोत्तरे ॥ 391

ईशानेतु शिवाग्निस्तु पञ्चाग्निरिति कीर्त्तितः ।
प्रधाने व्योम मूर्त्तिस्तु वायुमूर्त्तिस्तु पूर्वके ॥ 392

दक्षिणे वह्निमूर्त्तिश्च जलमूर्त्तिश्च सौम्यके ।
क्ष्मामूर्त्तिःपश्चिमे कुण्डे कुण्डानां मूर्त्तिधारकाः ॥ 393

கிழக்கில் ஆஹவனீயாக்னியும், தெற்கில் தக்ஷிணாக்னியும் வடக்கில் கேவலாக்னியும், மேற்கில் கார்ஹபத்யாக்னியும் வடகிழக்கில் சிவாக்னியும் பூஜிக்கப்படவேண்டும். இந்த பஞ்சாக்னியில், பஞ்சமூர்த்திகளும் பூஜிக்கப்படவேண்டும். அதாவது ப்ரதான குண்டமான வடகிழக்கிலுள்ள குண்டத்திலுள்ள சிவாக்னியில் வியோம மூர்த்தியையும், கிழக்கிலுள்ள ஆஹவனீயாக்னியில் வாயு மூர்த்தியையும், தெற்கிலுள்ள தக்ஷிணாக்னியில் வன்னிமூர்த்தியையும், வடக்கிலுள்ள கேவலாக்னியில் ஜலமூர்த்தியையும், மேற்கிலுள்ள கார்ஹபத்யாக்னியில் ப்ரதிவீ மூர்த்தியையும் பூஜிக்கவேண்டும். பிறகு இவ்வாறு மூர்த்தீச்வரர்களையும் பூஜிக்கவேண்டும்.

ततो मूर्तीश्वरान्वच्मि प्रधानात्पश्चिमान्तकम् ।
ईशे सदाशिवः प्रोक्तश्चेश्वरः पूर्व देशके ॥ 394

रुद्रस्तु दक्षिणे भागे विष्णुश्चोत्तर कुण्डके ।
ब्रह्मावै पश्चिमेकुण्डे ह्येते च मूर्त्तिपाःस्मृताः ॥ 395

ப்ரதானுக்னி முதல் வரிசையாக மூர்த்தீச்வரர்களைத் தியானிக்க வேண்டும். அதாவது பிரதானத்தில் பூஜிக்கப்படும் வியோம மூர்த்திக்கு மூர்த்தீச்வரராக சதாசிவனைப் பூஜிக்கவேண்டும். இவ்வாறு கிழக்கில் பூஜிக்கப்படும் வாயுமூர்த்திக்கு, ஈச்வரனையும் தெற்கில் பூஜிக்கப்படும் வன்னிமூர்த்திக்கு உருத்திரனையும், வடக்கில் பூஜிக்கப்படும் ஜலமூர்த்திக்கு விட்ணுவையும் மேற்கில் பூஜிக்கப்படும் ப்ரதிவீ மூர்த்திக்குப் பிரமனையும் மூர்த்தீச்வரர்களாகப் பூஜிக்கவேண்டும்.

पञ्चपक्षे क्रमोह्येवमेतेषां ध्यानमुच्यते ।
ईशे सदाशिवः प्रोक्तः रूपध्यानं च पूर्ववत् ।
पञ्चावरणमार्गेण पूजयेद्देशिकोत्तमः ॥ 396

பஞ்சகுண்ட பக்ஷத்தின் முறை இவ்வாறு கூறப்பட்டது. இதில் கூறப்படும் சதாசிவன் முதலிய மூர்த்திகளின் தியானமும் கூறப்படுகிறது. முதலாவதான சதாசிவமூர்த்தியின் தியானம் முன்பு நவகுண்டபக்ஷ பூஜாவிதியின் ஆரம்பத்தில் கூறப்பட்டிருக்கிறது. இங்கும் அவ்வாறே தியானிக்கப்பாலது இந்த சதாசிவ மூர்த்தியை ப்ரதான குண்டமாய் வடகிழக்குத் திக்கில் உள்ள சிவாக்னியின் மத்தியில் பஞ்சாஸனமார்க்கமாய்ப் பூஜித்து முன்போல் சதாசிவ மூர்த்தியைத் தியானிக்கவேண்டும்.

पूर्वेकुण्डे त्रिणयनं त्वेकवक्त्रंस्मिताननम् ।
व्याघ्रचर्म परीधानं नागयज्ञोपवीतिनम् ॥ 397

शुद्धस्फटिक संकाशं चन्द्रार्ध कृत शेखरम् ।
अक्षमालां त्रिशूलं च खड्गाभितिं च दक्षिणे ॥ 398

बाणं कमण्डलुं चाब्जं वरं वामेदधानकम् ।
इद्धं ध्यायेदीश्वरं च सर्वाभरण भूषितम् ॥ 399

புன்சிரிப்புடைய ஒருமுகத்தில், மூன்று கண்களை உடையவர் புலித்தோலாடையை அணிந்தவர், பன்னகத்தைப் பூணலாக அணிந்தவர், சுத்தமான ஸ்படிகம் போன்ற ஒளியுடையவர், பாதி சந்திரனை சிரோபூஷணமாகக் கொண்டவர், அக்ஷமாலை திரிசூலம், கத்தி, அபயம் இவைகளை வலது கைகளிலும் பாணம் கமண்டலு, தாமரைப்பூ வரம் என்ற இவைகளை இடது கைகளிலும் தரிப்பவரான ஈச்வரனைக் கிழக்கிலுள்ள குண்டத்தில் தியானிக்கவேண்டும்.

रुद्रं दक्षिण कुण्डेतु भस्मोद्धूळित विग्रहम् ।
चतुर्भुजं त्रिणेत्रं च जटामकुट मण्डितम् ॥ 400

माणिक्कानेक वर्णाभं पीतवस्त्रेण वेष्टितम् ।
सव्ये व्याख्यान मनलं वामे पुस्तक शूलकम् ॥ 401

தென் திசையில் விளங்கும் குண்டத்தின் மத்தியில் விபூதியணிந்தவராய், நான்கு கைகளையுடையவராய், முக்கண்ணராய், ஜடாமகுடத்தினால் அலங்கரிக்கப்பட்டவராய் அனேகம் மாணிக்கம் போன்ற வண்ணமுள்ளவராய், பொன்வர்ணமுடையதான வஸ்திரமணிந்தவராய் வலதுகையில் சின்முத்ரை அக்னியையும் இடது கைகளில் புஸ்தகம், சூலம் இவைகளைத் தரித்தவரான தோற்றமுடைய உருத்திரனைத் தியானிக்கவேண்டும்.

(தொடரும்)

# ஆடித்திங்களின் அருள்நினைவுகள்

ஆசிரியப் பெருமக்கள் அருளொளி உலகில் நிறைந்து ஞானநெறி பரவும் பொருட்டு இறைவன் திருவுள்ளம்கொண்ட வாறே நம் சமயத்தில் திருமுறையாசிரியர்கள் தோன்றிய காலம் பொற்காலம் என்றே கூறவேண்டும். அப்பரடிகளும், திருஞான சம்பந்தரும் ஒரே காலத்தில் வாழ்ந்து அருள்நெறி பரப்பினார் கள்; அவர்களுக்குப் பிற்பட்டு வந்த சுந்தரரும் அந்நெறி நின்று செந்நெறி விளக்கினார்கள். இவ்விரு பரமாசாரியர்களை யும் நினைவுகூரும் வகையில் ஆடிமாதம் அன்புலகின்முன் வருகிறது. திருநாவுக்கரசுப்பெருமானார் தென்கயிலைக் காட்சி; சுந்தரமூர்த்திகள் திருக்கயிலைக் காட்சி. இவ்விரு அருள்நினைவு களும் இம்மாதத்தில் எழுகின்றன. ஆடி அமாவாசை, ஆடிச் சுவாதி இவ்விரு நாட்களும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து உள்ளத்தே ஒரு திருக்காட்சியை எழுப்புகின்றன.

அப்பர் பெருமானுடைய திருவாக்கிற் பெரிதும் ஈடுபட்டவர் சுந்தரமூர்த்திகள். சுந்தரர் செந்தமிழிற் பெரும்பாலன அப்ப ரடிகள் தேவார விளக்கமாக இருத்தலைச் சைவ உலகு நன்கு அறியும். சில கருத்துக்களை அப்பரடிகளும், சம்பந்தரும் குறிப்பாகக் கூறிச்செல்ல, அவற்றை விளக்கும் நன்மை சான்றன வாக சுந்தரர் திருப்பாடல்கள் பல வருதல் உண்டு. மூவர் தமிழையும் ஒப்பிட்டு, பொருளுணர்ச்சியோடு ஆராய்ந்தால் இந்தக் கருத்து வழியை - எண்ணச் சங்கிலியை - திருவருட் பிணைப்பை நன்கு காணலாம்.

"நல்லிசை ஞானசம்பந்தனும், நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" என்பது நம்பியாரூரர் நன்மொழி, தாம் அருளிய திருத்தொண்டத் தொகையில், முந்திய ஞானசாரியர்கள் இருவரையும் சுந்தரர் பின்வரும் அழகிய தொடர்களால் ஏத்திப் போற்றுவர்,

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன்"

" வம்பரு வரிவண்டு மண நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் "

திருநாவுக்கரசருடைய,

" சிவனெனும் ஓசையல்லது அறையோ உலகில்
திடுநின்ற செம்மை உளதே " (4 - 8 - 1)

என்ற திருவாக்கிலும், திருஞானசம்பந்தருடைய

" கைச்சிறு மறியவன் கழல் அலாற்பேணாக்
கருத்துடை ஞானசம்பந்தன் " (1 - 77 - 11)

என்ற திருவாக்கிலும் ஆழ்ந்து நின்ற சுந்தரர் தம்செந்தமிழில் அத் தொடர்களையே வைத்து அருளியுள்ளமை அன்புலகு அறிந்து மகிழவும் பின்பற்றவும் வேண்டிய ஒன்றாகும்,

" நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன்சடை அடிகள் நின்றவாறே "

என்று இறைவன் காலங்களாய் நின்று அருளுமாற்றை அப்பர் அருளினார்.

" நாளை யின்று நெருநலாய் ஆகாயம் ஆகி
ஞாயிறாய் மதியமாய் நின்ற எம்பிரானை " (7 - 40 - 4)

என்று அக்கருத்தையே ஆளுடைய நம்பிகள் இனிது விளக்கியுள்ளார்.

" மறவனாய்ப் பன்றிப்பின் சென்ற மாயமே" (5 - 68 - 5)

என்று மனம் கனிந்தார் நாவரசர். அவ்வாறே,

" மறவனை அன்று பன்றிப்பின்சென்ற மாயனை " (7-6-87)

என்று போற்றினார் சுந்தரர்.

எப்போதும், இரவும் பகலும் இறைவனையே எண்ணி எண்ணி இன்புற்றவர் அப்பரடிகள். அவ்வருள் அனுபவம், " எல்லியும் பகலும் எல்லாம் நினைந்தபோது இனியவாறே'

என்று வெளிப்பட்டது. அவ்வெளிப்பாடு சுந்தரரது திருவுள்ளத்தில் கலந்து குழைந்து; 'எம்மானை மனத்தினால் நினைந்த போது அவர் நமக்கு இனியவாறே'' என்று அழகிய வடிவம் கொண்டது. ''எற்றினான் மறக்கேன் எம்பிரானையே'' என்று குறுந்தொகையிற் கூறிய அப்பர் அருள்மணத்தை, ''எற்றால் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே'' என்ற சுந்தரர் திருவாக்கில் காணலாம்.

இவ்வாறு இவ்விரு ஞானப் பேராசிரியர்களும் ஒருநெறி நின்று உலகிற்குத் திருநெறி காட்டினமையை அறிந்து உலகு இன்புற இவர்கள் திருவாழ்வும் துணைபுரிகிறது. கயிலை காணற்கு அப்பர் மேற்கொண்ட உறுதியும், திட்பமும் அளவிட இயலாதவை. ''ஆளும் நாயகன் கயிலையின் இருக்கைகண்டலால் மாளும் இவ்வுடல்கொண்டு மீளேன்'' என்ற உறுதி ஆளுடை அரசரிடம் இருந்தது. உடலெல்லாம் தேய்ந்தாலும் உள்ளம் தேயவில்லை; உறுதி தேயவில்லை. ''மன்னு தீந்தமிழ் புவியின் மேல் பின்னையும் வழுத்த'' இறைவன் கயிலைக் காட்சியை அங்கு அருளாது ஐயாற்றிற்கு வருகை புரியப்பணித்த திருவருட் பாங்கினைச் சேக்கிழார் இனிது எடுத்து உரைப்பர்.

கயிலை கண்ட குருமணியாம், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்களும் அரிதின் யாத்திரை செய்து ஆடி அமாவாசையன்றுதான் திருக்கயிலைத் தரிசனம் செய்தருளியவர்கள். அப்பரடிகள் அருளமுதிற் றோய்ந்து திளைக்கும் அருமைப்பாடுடையவர்கள். ஆடி அமாவாசையன்று கயிலாய தரிசன நிறைவை ஒரு பெருவிழாவாகத் தருமையில் நிகழ்த்தியருளும் பேரருள் வண்மை உடைவர்கள்; உள்ளத்தில் உறுதியும், உடலில் உறுதியும், கொண்டு அன்பர் எல்லோரும் கயிலைக்காட்சி காணவேண்டும்; பிறந்தபயனைப் பெறவேண்டும் என்பது அவர்கள் திருவுள்ளம். இந்தத் திங்களில் வரும் இவ்விழாக்கன் (ஆடி அமாவாசை, ஆடிச்சுவாதி) அன்பர்கள் உள்ளத்தில் அருளின்பத்தைத் தேக்குதல் உறுதி. அப்பரடிகள் அடித்தாமரைகளையும், நம்பியாரூரர் நல்லடிகளையும் வாழ்த்தி வணங்கி வையமெல்லாம் நீடுவாழ்க.

---

# ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

# தலயாத்திரை

## திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் பாடல்பெற்ற பழம் பதிகள் பலவற்றையும் தரிசனம் செய்து அதனால் வரும் இன்பம் நுகர்ந்து மற்றவர்க்கும் வழங்கும் வள்ளலாக உள்ளவர்கள். பாடல்பெற்ற தலங்கள் எல்லா வற்றிலும் மாதந்தோறும் வழிபடும் முறையில் அவ்வத்தலப் பதிகங்களை அச்சிட்டு அங்கங்கும் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தக்க ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு பதிகங்களை ஓதுவித்து நிறைவெய்தச்செய்திருக்கிறது. நேரில் எழுந்தருளி தரிசித்து வழிபாடுசெய்து வருவதில் இன்னும் ஒரு சில தலங் களில் வழிபாடு எஞ்சிநிற்கிறது பாண்டி பதினான்கனுள் திருப்புனவாயில், திருஆடானை, திருக்கானப்பேர் (காளையார் கோவில்) திருப்பூவணம், திருச்சுழியில், திருவேடகம் ஆகிய இவ்வாறு தலங்களும் தங்கி நிற்கின்றன.

பாண்டிநாட்டுவழிபாடு நிறைவுற 13—7—64 அன்று மாலை 2-15க்குமேல் தருமையிலிருந்து எழுந்தருளினார்கள். இரவு 8 மணி அளவில் மதுரையை அடைந்தார்கள். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம் பிரதம பட்டர் சிவதர்ம பாஸ்கர சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டரவர்கள் எல்லையிலேயே அருளிப் பாட்டுப் பிரசாதத்துடன் எதிர்கொண்டு வரவேற்று (தல்லா குளம்) சொக்கிகுளத்தில் ஒரு வசதியான இடத்தில் எழுந் தருளச் செய்தார்கள். திருமஞ்சனம் ஆகி அநுஷ்டானம் முடித் துக்கொண்டு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசரை வழிபட ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தில் எழுந்தருளினார்கள். வழக்கம்போல சிவஸ்ரீ பட்டரவர்களும், ஆலய அதிகாரிகளும் உடன் இருந்து வழி பாட்டைச் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

### திருப்புனவாயில் :

14-7-64 அன்று அதிகாலையில் மதுரையிலிருந்து திருப்புன வாயிலுக்கு எழுந்தருளினார்கள். மதுரையிலிருந்து சிவகங்கை, காளையார்கோவில், திருவாடானை வழியே புனவாயில் வந்துசேர

காலை மணி 10 ஆகிவிட்டது. நல்ல வெய்யில்நேரம். அறந்தாங்கி வந்து ஆவுடையார்கோவில் வழியில் சென்று புனவாயிலுக்குச் செல்ல நல்ல கற்சாலை இருக்கிறது. ஆற்றைத்தாண்ட வேண்டியுமிராது. அக்னிஆற்றின் வலதுகரையில் அமைந்த அழகிய தலம் இது. ஆற்றிலும் தண்ணீரில்லை. அவ்வழியே செல்லாது சிவகங்கை வழியே சென்றதில் ஆற்றைக் கடப்பதில் துன்பம் ஏற்பட்டது. ஆனால் வழிபாட்டு இன்பத்தில் அது மறைந்துவிடுகிறது. பெருமான் பழம்பதிநாதர், அம்பிகை கருணைநாயகி; தீர்த்தம் - புண்டரீக மலர்ப் பொய்கை - (இலக்குமி தீர்த்தம்); தலவிருட்சம் - புன்னை; இத்தலத்துக்குத் திருஞானசம்பந்தர் பாடியருளிய (மூன்றாந் திருமுறை) பதிகம் "மின்னியல் செஞ்சடை" ஒன்றும், சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச் செய்திருக்கும் "சித்த நீ நினையென்னொடு" என்பதும் ஆக இரண்டு பதிகங்கள் உண்டு. சம்பந்தர் அருளிச்செய்திருப்பதில், முறையே, தலவிருட்சம், தீர்த்தம், ஊர்தி, படை, பெருமாட்டி பாட பெருமான் ஆடும் சிறப்பு, பெருமான் திருவடிகளை வழிபட்டோர் இடரில்லாது உய்திபெறும் சிறப்பு. தலச் சிறப்பு முதலியன சொல்லப்பட்டுள்ளன.

"வேதனை நாள்தொறும் ஏத்துவார் மேல்வினை வீடும்" என்பது பதிகப் பாராயணத்தின் பயன். "அருள் சேர்வர்" என்று பதினொராவது பாடலிலும் அமைந்திருக்கிறது. பதிகம் அருளிச்செய்தவருடைய பெருமையோ, "கற்றவர் தாம் தொழுதேத்த நின்ற கடற்காழியான்" என்றும் பதிகப் பெருமையாக "நற்றமிழ் ஞானசம்பந்தன் சொன்ன தமிழ்" என்றும், பயன் "நன்மை" ஆகும் என்றும், அது "அற்றமில் பாடல் பத்துடையது" என்றும் அதனைப் பாராயணஞ் செய்வோர் திருவருள் கூடப்பெறுவர் என்றும் விளங்கக் கூறப்பட்டிருக்கிறது.

சுந்தரர் தம் மனத்தை - சித்தத்தை - தன்னோடு ஒத்துழைக்குமாறு வேண்டுகிறார்; "மறவேடுவர் பொருது சாந்தொடு பூசலறாப் புனவாயில்" "வில்லாய்க்கணை வேட்டுவராட்ட வெருண்டுபோய்ப் புல்வாய்க்கணம் புக்கொளிக்கும் புனவாயில்" என்று கூறும் மறவேடுவர் உறையும் ஊரைத் தனக்கிடமாகக் கொண்டிருக்கிறார். ஆங்குள்ள ஆந்தைகளும் பொந்திலிருந்து பெருமான் புகழ்பாடும் இயல்பின; வேடுவர் விரட்ட புல்வாய் (மானினம்) புகலாக வந்தடையும் இடம் புனவாயில்; புனவாயிலில் உள்ள கற்றாறு கார்க்காட்டினுள் மேய்ந்த கார்க்கோழிபோய் புற்றேறி நின்று வல்

வினை மாய்ந்தற கூகூவெனக்கூவி அழைக்கும் திறமும், பொற்குன்றம் சேர்ந்ததோர் காக்கை பொன்னுமது போல கற்குன்றுள் தூறும் கடுவெளியுங் கடற்கானல் வாய்ப்புற்கென்று தோன்றிடும் எம்பெருமான் புனவாயிலே புகல் என்றிருத்தி மனமே'' என்றும் அருளுரைகள் வழங்குகிறார்கள்.

இங்குள்ள மூர்த்தி உருவத்தில் 9, 10 அடி உயரமுள்ளவராய் அதற்கேற்ற மற்ற அமைப்புக்களும் உடையவராய் விளங்குகிறார். விமானம் அதற்கேற்ப சதுரவடிவமுடையதாய் இருக்கிறது. அம்மன் சந்நிதிக்கதவு வருஷத்துக்கு ஒருமுறைதான் திறக்கப்படும். அங்கு துர்க்கை எழுந்தருளியிருக்கிறாள். மிக்க வரதை.

திருவாடானை :

திருவாடானையில் பெருமான் இரத்தினேஸ்வரர், அம்பிகை சிநேகவல்லி - அம்பாயிரவல்லி. திருஞானசம்பந்தர் பதிகம் ''மாதொர்கூறுகந்தேறதேறிய'' என்ற ஒன்று இருக்கிறது. பெருமான் உருவில், மிகச் சிறிய வடிவில் எழுந்தருளியிருக்கிறார். ஒளியுள்ள மூர்த்தி, தீபாராதனை பின்புறம் காட்ட இரத்தின வடிவம் ஒளியில் தெரிகிறது. பதிகப் பயன் வினைநீக்கம். பதிகப் பாராயணப்பயன் நோய் நீங்கி திருவடிப்பேரின்பம் சித்தித்தல். பிருகு முனிவர் முன்னொரு காலத்தில் துர்வாசமா முனியை அவமதித்ததால் ஆட்டுத் தலையும் யானை உடலும் பெற்று உழலச்சாபம்பெற்றார். அச்சாபம் நீங்க அவ்வுருவோடு இங்குப் பெருமானை வழிபட்டமையால் தலம் ஆடானை (அஜகஜபுரம்) எனப் பெயர்பெற்றது. சூரியன் இங்கு நீலமணியை இட்டுப் பெருமானைக வழிபட்டமையால் பெருமான் இரத்தினேஸ்வரர் எனப் பெயர்பெற்றார்.

திருக்கானப்பேர் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தை உரிய முறையில் கோபுரவாயிலிலேயே அருளிப்பாடு கண்டு தக்கமுறையில் உடனிருந்து வழிபாடுசெய்து வைத்தவர் அவ்வாலய ஸ்தானீகம் சிவஸ்ரீ அய்யாமணி சிவாசாரியார் அவர்கள். பாடலில் கானப்பேர் என வழங்கும் இத்தலம் காளையார்கோவில் என வழங்கப்படுகிறது. இங்கு மூன்று மூல மூர்த்திகளும், மூன்று

அம்பிகை மூர்த்தங்களும் இருக்கின்றன. ஸ்ரீ காளீஸ்வரர் - ஸ்ரீ சொர்ணவல்லி, ஸ்ரீசுந்தரேசர் - ஸ்ரீமீனுட்சி, ஸ்ரீசோமேசர் - ஸ்ரீசௌந்திரநாயகி என்று அம்மூர்த்திகளுக்குப் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

பாடல்பெற்றபெருமான் ஸ்ரீகாளீஸ்வரர்பலருக்குக்குலதெய்வமாகவிளங்குகிருர். இந்திரன் வெள்ளையானைமீது பவனிவரும்போது துர்வாசர் அளித்த சிவபூசைப் பிரசாதத்தை மதிக்காது அதனை வாங்கித் தானிவர்ந்துவந்த ஐராவதத்தின் தலையில் வைத்தான். அது அப்பிரசாதத்தைத் தன் துதிக்கையால் எடுத்துக் கீழே போட்டு மிதித்து அபகாரம் செய்தது. இதனைக் கண்டு சீற்றங்கொண்ட முனிவர் யானையைக் காட்டானையாகக் கடவது எனச் சபித்தார். அச்சாபம் இங்குள்ள பெருமானை வழிபட்டதால் நீங்கிப் பழைய நிலையில் இந்திரனுக்கு வாகனமாகும் பெருமையையும் பெற்றது. இக்குறிப்பு இத்தலத்துப் பதிகத்தில் திருஞானசம்பந்தர் அருளால் காணப்படுகிறது. வழிபடும் முறை - மலர்தூவி விடியலே தடமூழ்கி விதியினுல் வழிபட வேண்டும்.

வழிபடும் அன்பு நிறையுடைய நெஞ்சுளும், நீருளும், பறையுடைய முழவுளும், பலியுளும், பாட்டுளும் எல்லாவற்றிலும் கறைமிடற்றண்ணல் எண்ணி உறையும் கானப்பேர் எண்ணுபவர்கள் குற்றங்களையவல்லவராவர். மகாவிஷ்ணுவின் தோல் போர்த்து சட்டைநாதனுக அதன்மேல் பிரமர்களுடைய எலும்பு மாலை பூண்டவனுக முடிவிலாத ஆயிரம்பேர் பூண்டு கானப்பேரில் உறைவானை மிகு அன்பினுல் வழிபடும் (தீதில்லாதவர்கள்) நல்லவர்கள். (வானப்பேரூர்) புகுவிக்கும் வல்லமை உடையவர்கள், மனக்குற்றம் சிறிதும் இல்லாதவர்கள், அவன் நாமமே நிறையப்பெற்ற மனமுடையவர்களுடைய உள்ளத்தைப் பெருமான் உறை கோயிலாகவே நான் உள்ளத்தில் எண்ணுகிறேன். பெருமானை மலர்கொண்டு அர்ச்சித்தால் மிக நன்மை (ஞானமாகிய வீடுபேறு) உண்டாகும், கானப்பேர் இறைவன் திருவடிகளை இடைவிடாது (தலைதாழ்த்தி) வணங்குவார்கள் ஒவ்வொருநாளும் மேன்மேலும் உயரும் பெருநன்மை (சிவசத்தி) யைப் பெறுவர். நீண்ட வாழ்நாள் பெறுவர். வளர்ச்சியுடைய ஈறிலாத இன்பவாழ்வெய்துவர். தலையினுல் வணங்குதல் மேலான தவமாகும். பெருமானைக் கைதொழுது வழிபடல் நம் கடமையுமாகும். பதிகப் பாடலின் பலன் பாவம் கெடும் என்பர் சம்பந்தர்.

"கானப்பேருறை காளையை என்று கொலோ அடியேன் கண்டு தொழப்பெறுவது" என்றும். "இறையாம் எந்தையையும் விரவி நண்ணுதலைப்பாடுமாறெங் ஙனமென்று அயலேநைகின்ற என்னை மதித்துய்யும் வணம் அருளும் கண்ணுதலைக் கனி யைக் காண்பதுமென்று கொலோ" என்றும் "காதலுறத் தொழுவதென்று கொலோ" என்றும் "மூவருருத்தனதாம் மூல முதற்கருவை காவல் - எனக்கு இறை என்று எய்துவது என்று கொலோ" என்றும் இரங்கிப் பாடி யிருக்கிறுர். அப்பதிகப் பாராயண பயன் "பன்னும் இசைக்கிளவி பத்திவை பாடவல் லார் பத்தர்குணத்தினராய் எத்திசையும் புகழ மன்னியிருப்பவர் கள் வானினிழிந்திடினும் மண்டல நாயகராய் வாழ்வது நிச்ச யமே" என்றும், ஓண்பொழில் நாவலர் கோனுகிய ஆரூரன் பாடியுள்ளார். பத்திவை பாடவல்லார். ஓண் சீருறை தண்ட மிழால் உன்னி மனத்தயரா உள்ளுருகிப் பரவுவர்.

இங்குப் பூரண கும்ப மரியாதைகளோடு அருளிப்பாடு வழங்கி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தை உரியவர்கள் வரவேற்று வழிபாடுசெய்து வைத்தார்கள். இங்குக் காளேஸ்வரமூர்த்தி மிகவும்ஒளியுள்ளது அழகியது. அந்தச்சந்நிதியில் சிவகங்கைச் சிற்றரசன் பெரியமருது, சின்னமருது சகோதரர்களின் சிலைகள் இருக்கின்றன. அந்தச்சந்நிதியிலேயே தங்களை அடக்கம்செய்து வைக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பியவண்ணம் அவர் களுடைய சமாதிகளும் அமைந்திருக்கின்றன. இங்கு வழிபாடு உச்சிப்போதில் முடிந்தது. அங்கிருந்து சிவகங்கை வழியாக மதுரை வழியில் 3 கல்கடந்து திருப்பூவணத்திற்குப் புதிதாக அமைக்கப்பட்ட கற்சாலை வழியே சென்றடைந்தபொழுது மாலை மணி 2-க்கு மேலாகியது. அங்குச் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டு திருமஞ்சன முடித்து ஆலய வழிபாட்டுக்கு எழுந்தருளினுர்கள்.

### திருப்பூவணம் :

வைகையின் தென்கரையில் அமைந்த திருத்தலம் - மதுரை மானுமதுரை வழியில் (ராணி மங்கம்மாசாலை) மதுரையிலிருந்து 12 கல் தொலைவு. இங்கிருக்கும் மணிகர்ணிகையில் விழுந்து இறந்தவர் எலும்புகள் பூவானமையால் இது பூவணம் என்னும் பெயர் பெற்றது. அன்பர் ஒருவர் பெருமா னுக்காக நந்தவனம் அமைத்து வழிபட்டமையால் பூவனம் ஆயிற்று என்பதும் வரலாறு. 64 திருவிளையாடலில் இங்கு

**வகித்த பொன்னனையாள் பலநாள் நினைந்து நினைந்து ஏங்கி யிருந்ததை மாற்ற சொக்கேசன் இரசவாதம் செய்தருளியதாகவும் வரலாறு.**

பொன்னனையாள் எனும் காரிகை அன்றன்றும் தன்னை நாடி வருபவர் கொடுப்பதைக்கொண்டு அடியார்க்கு அமுதளிக்கும் நியமமேற்றிருந்தாள். அன்றாடமும் வரும் வருவாய் அன்னம் பாலிப்புக்கன்றி ஏதும் மிஞ்சாதாயிற்று. ஆனால் பெருமானைப் பொன்னில் செய்தமைத்துக் கண்டு வழிபட வேண்டுமென்ற பேரவா அவளுக்கு இருந்தது. அதற்கு ஏதும் மிஞ்சாது வரவும் செலவும் ஒத்ததாக இருக்க அதனை நினைந்து மனதில் ஏக்கம் கொண்டு வாடினள். அதனைப்போக்க சித்தருருவில் பெருமான் அவளை நாடி வந்தார். உரிய முறையில் வரவேற்று வழக்கப்படி அச்சித்தரையே அன்றைய நாயகராக ஏற்றாள். பெரியவர்க்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்தாள். வெளிக்கு மலர்ச்சி யோடு இருந்தாலும் அவளுக்கு உள்ளிடம் இருப்பது எதற்கு என்று அப்பெருமான் வினவியபோது தன் மனவயத்தை விளக்கினள். கவலை ஒழிக வீட்டிலிருக்கும் எல்லாப் பண்டங் களையும் கொண்டுவந்து ஓரிடத்தில்போடு என்று ஆணையிட்டு அதன்மீது திருநீற்றைத்தூவி நெருப்பிடப்பணித்து மறைந்தார். அவ்வாறே செய்துபார்க்க எல்லாம் பொன்னாயிற்று. அதனைக் கொண்டு அளவிலா ஆனந்தங்கொண்டு அதினின்றும் பெரு மான் உருச்செய்து பார்த்து மனதில் அளவிலா காதலோடு "என் அழகரோ" என்று சொல்லி அள்ளிமுத்தமிட்டு மார்புறத் தழுவி ஆனந்தக் கூத்தாடி மகிழ்ந்தாள். அவள் அள்ளிமுத்த மிட்ட நகக்குறி பெருமானுடைய வலது கன்னத்திலும் முலைச் சுவடு திருமார்பிலும் இன்றும் காணலாம். இத்தலத்துக்குத் திருஞானசம்பந்தர் பதிகம் இரண்டும், அப்பர் சுவாமிகள் அருளிய திருத்தாண்டகம் ஒன்றும், சுந்தரர் பதிகம் ஒன்றும், கருவூரார் அருளிய திருவிசைப்பா ஒன்றும் ஆக திருமுறைப் பாடல்கள் இருக்கின்றன.

முடிசேர் தென்னர், சேரர், சோழர் தாம் முறையில் வணங் கிப் போற்றிசைக்கும் பெருமான் நன்றுதீதென்றென்றிலாத நான்மறையோன், பாடியவர் பெருமை "நண்ணாருட்க(அமணர் அஞ்சி யொழிந்த) காழிமல்கு ஞானசம்பந்தன்" என்றும், "வெந் துயர் உறுபிணிவினைகள் தீர்வதோர் புந்தியர் தொழுதெழு பூவணத்துறைநந்தி (பெருமான்)"என்றும் "மலர்புனைந்தேத்து வார் வினை நாசனை" கேடில் கொள்கையன், அடிதொழ நன்மை

யாகும் பீடை இல்லை என்றும், அடிதொழ அல்லல் இல்லை, பரவிய அடியவர்க்குப் பாவம் இல்லை, ஏர்மல்கு மலர்புனைந்தேத்தல் இன்பம். பூவணம் கண்டவர் அடிதொழுதேத்தல் கன்மமே ; என்றும் ஒவ்வொரு பாட்டிலும் பயன் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பர் சுவாமிகள் பெருமான் திருவுருவைக்கண்டு திருவுருவிலே அமைந்திருப்பன எல்லாங்கண்டு அருள்தகைமைகண்டு "தோன்றும் தோன்றும் என்று அருளியிருக்கிறார்கள். பல புராண வரலாறுகள் சொல்லப்படுகின்றன. "ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன் உடல் துணித்த இடர்பாவங் கெடுப்பித்து. என்று இராமபிரானுக்கு இராவணவதத்தால் சேர்ந்த பிரமகத்திதோஷபரிகாரம் அருளிய செய்தி குறிப்பிடப்படுகிறது. "பொன்னனைய திருமேனி" என்று பதிகத்தில் வருவதை, இரசவாதம் செய்த திருவிளையாடல் குறிப்பிட்டிருப்பதாகவும் கருதுகிறார்கள். வைகை திருக்கோட்டில் நின்றதோர் திறம் என்பது மண் சுமந்த திருவிளையாடலையும் குறிப்பதாக அறிஞர் கருதுகின்றார்கள். ஆங்கணைந்த சண்டிக்கும் அருளியன்று தன் முடிமேல் அலர் மாலையளித்தல் தோன்றும், பல பிறவி அறுத்தருளும் பரிசும் தோன்றும் என்பனவற்றால் பிறவி நோய் அறுக்கும் அருள் வழக்கம் போற்றப்படுகிறது. ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்றஅருள் என்பது "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி' என்ற திருப்பாடல் கருத்தை வலியுறுத்தும்.

சுந்தரர் ! "உமையாளை யோர்பாகம் பரிவுடையார் அடைவார் வினை தீர்க்கும்" எண்ணியிருந்தும் கிடந்தும் நடந்தும் அண்ணலெனு நினைவார் வினைதீர்ப்பார். "புள்ளுவராகுமவர்க்கவர் தாமும் புள்ளுவனார்" பொன்னனையான் உறைபூவணம் நெக்கிறையே நினைவார் தனிநெஞ்சம் புக்குறைவான், என்று தமது திருப்பதிகத்தில் அருளியுள்ளார்கள். கருவூர்த்தேவர் திருவருள் புரிந்தாளாண்டு கொண்டிங்ஙன் சிறியனுக்கு இனியது காட்டிப் பெரிதருள் புரிந்தானந்தமே தருநின்பெருமையில் பெரியதொன்றுளதே என்று பாடியுள்ளமை காணலாம்.

சேர சோழ பாண்டியர் உடன்வர சுந்தரர் இங்கு எழுந்தருளி வந்து பூவணம் ஈதோ என்று பரிவோடு பதிகம் அருளிச் செய்தார். இப்பதிகம் பூவணம் அண்மைத்தாகத் தொண்டர்கள் அப்பதியைச் சுட்டிக்காட்ட வரும் வழியிலேயே பாடி அருளியதாகவும் பின்பு திருக்கோவிலில் சென்றிறைவனைப் பணிந்து பாடிப்பரவினதாகவும் புராண வரலாறு.

"பாம்பணைத் துயின்றோன் அயன் முதற்றேவர்
பன்னெடுங் காலம்நிற் காண்பான்
ஏம்பலித் திருக்க வென்னுளம் புகுந்த
எளிமையை யென்றும் நான் மறக்கேன்."

"கண்ணியன் மணியின் சூழல் புக்கங்கே
கலந்து புக்கொடுங் கினேற் காங்ஙன்
நுண்ணியை யெனினும் நம்பநின் பெருமை
நுண்ணிமை யிறந்தமை அறிவன்"

"கடுவினைப் பாசக் கடல் கடந்தைவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியிணை யிரண்டும் அடையுமா றடைந்தேன்
அருள் செய்வாய் அருள் செயாதொழிவாய்"

"செம்மனக் கிழவோரன்புதா என்று உன்
சேவடி பார்த்திருந்தலச
எம்மனங்குடி கொண்டிருப்பதற்கு யானார்
என்னுடையடிமை தான் யாதே"

"சொன்னவின் முறை நான்காரண மூணராச்
சூழல்புக் கொளித்த நீயின்று
கன்னவின் மனத்தென் கண்வலைப்படும் இக்
கருணையிற் பெரியதொன்று உளதே."

என்று கருவூர்த்தேவர் திருப்பூவணத்தைப்பற்றிக் கூறியிருப்பவை காணலாம்.

பதிகம் அருளியவர் தன்மை :

"செழுமறை தெரியுந் திகழ் கருவூரன் என்றும் பாடல் பனுவல், பாவணத் தமிழ்கள் பத்தும் வல்லார்கள் பரமனதுருவ மாகுவரே" என்றும் கூறப்பட்டுளது.

பூவண நாதர் உளிபடாத் திருமேனி, தேவிமின்னம்மை, சோமாஸ்கந்தர் - அழகிய சொக்கர். சுவாமி சந்நிதி கோபுர வாயிலில் சித்தர் திருவுருவம், பொன்னனையின் திருவுருவம் இவற்றை எழுந்தருளிவித்திருக்கிறார்கள். சந்நிதிகளில் திருப்பதிகப் பாராயணத்துடன் வழிபாடுகள் செய்துகொண்டு திருச்சுழியலுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள்.

நரிக்குடி சாலையில் சென்று திருச்சுழியல் வந்தடையும் பொழுது மாலை மணி 6. பூவணம் விட்டுப் புறப்பட்டதிலிருந்து நரிக்குடி வரும்வரை வழியில் நல்ல மழை. புதிதாக அமைத்த கற்சாலை - செம்மையாக இல்லை.

திருச்சுழியல் :

ஆலய முகப்பிலே ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை அருளிப்பாடு அளித்துப் பூரணகும்ப மரியாதைக ளோடு வரவேற்றுபசரித்தார்கள். சந்நிதிகளில் பதிகம்பாடி வழிபாடுகள் முடிவடைந்தன. சுவாமி திருமேனிநாதர் -அம்பிகை துணைமாலை அம்மை, சிறப்பாக ருத்ரமூர்த்தி சந்நிதி இரண்டாம் பிராகாரத்தில் வடமேற்கு திக்கில் இருக்கிறது. சுந்தரர் பதிக மொன்றிருக்கிறது.

"ஊனும் உயிர்புகலாய், அகலிடமாய் முகில்பொழியும்...... நானுவித நினைவார் தமை நலியார் நமன்தமர்" "தொண்டே செயவல்லாரவர் நல்லார் துயர் இலரே" "திருச்சுழியல் தெய் வத்தினை வழிபாடு செய் தெழுவார் அடிதொழுவார் அவ்வத் திசைக்கு அரசாகுவர் அலரால் பிரியாளே." "அலையார் சடை யுடையான் அடிதொழுவார் பழுதுள்ளம் நிலையார் திகழ் புகழால் நெடுவானத்துயர் வாரே" "திருநாமம் கற்ரு ரவர்கதியுட் செல்வரேத்தும்மது கடன்; மலராற், கொழும் புகையால் நினைந்தேத்தும் தலந்தாங்கிய புகழாம் மிகுதவமாம். சதுராம்;" சைவத்த செவ்வுருவன்....... திருச்சுழியல் மெய் வைத்து அடிநினைவார் வினைதீர்தல்" "எம் சிரத்தான்தன் அடியே எளிதன்றே;" என்று பதிக முழுவதிலும் பயன் சொல்லப்பட்டிருக்கிறது.

14—7—64 அன்று இரவு திருநெல்வேலி திருமடத்துக்கு எழுந்தருளிவந்தார்கள். 15—7—64 மாலை திருச்செந்தூர் வடிவேலனைத் தரிசித்தார்கள் 17—7—64 குருவார மௌன உபவாசநாள். அன்று திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலய வழிபாடு முறையாக முடிந்தது.

18—7—64 ஆடி முதல் வெள்ளிக்கிழமை. அன்றுதென்குமரி தரிசனம் ஆயிற்று. அன்று தொடங்கி குமரித் தாய்க்கு லட்சார்ச் சனை நடைபெற்றது. 24—7—64 அன்று இரண்டாவது ஆடி வெள்ளியும் பூரணையும் பொருந்திய நாளில் லட்சார்ச்சனை

பூர்த்தியும் புஷ்பாஞ்சலியும் நிறைவுற்றது. இந்த ஒருவார காலத்தின் இடையில் இருமுறை குமரக்கோவில் (திருஏரகம்) வழிபாடுகள் நிகழ்ந்தன. சுசீந்தரத்தில் தாணுமாலயன் வழி பாடும் சிறப்பாக நடைபெற்றது. இப்பக்கங்களில் உள்ள ஆதீன மடத்துக்குச் சொந்தமான சிவஞானபுரம், எருக்கன் துறை கிராமங்களையும் பார்வையிட்டருளினார்கள். தென்னைகள் பயிர்செய்ய உத்தரவிட்டு அவ்விதமே நூற்றுக் கணக்கில் நடப் படுகின்றன.

பாண்டிநாட்டுத் தல தரிசனத்துக்கு எழுந்தருளியபொழுது மதுரை சிவதர்மபாஸ்கர சிவஸ்ரீ ம. க. சுந்தரேச பட்டரவர்கள் உடன் வந்தார்கள். இவர் ஆகமம், திருமுறை முதலியவற்றிலும் இசையிலும் அவர்களுக்குச் சிறந்த ஞானமுண்டாகவே அவ்வப் பொழுது ஆழ்ந்த கருத்துக்களடங்கிய பொருள்களைப்பற்றி எளிமையாக விளக்கி வருவார்கள். மொழித்தடங்கல் இல்லாது பாமரரும் விரும்பும் வகையில் கேட்போர் வியந்து மகிழும் வண்ணம் இருக்கும் அப்பேச்சு. ஆகையினால் பகலில் கடும் வெப்பமாக இருந்தும் வழிச்செலவு இன்பமாகவே கழிந் தது. மாலையில் நடுவழியில் மழையும் சேரவே பெரியோர் சொற்களைச் சிந்தனை செய்தால் உலகு குளிரும். உளம் குளிரும் எங்கும் எல்லாமும் இன்பமாகவே தோன்றும் என்பதை உணர வாய்ப்பாயிற்று.

திருஏடகம் :

நெல்லையிலிருந்து தருமைக்கு எழுந்தருளும்போது திருஏடகத்திற்குச் சென்று தரிசனம் செய்தார்கள். திருஞான சம்பந்தர், சமணர்களோடு புனல்வாதம் நிகழ்த்தியபோது ஏடு எதிர் சென்று அணைந்ததலம் இது. இறைவன் திருப்பெயர் ஏடகநாதர் இறைவியின் திருப்பெயர் ஏலவார்குழலி. இத்தலத் தரிசனத்திற்குப்பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

## தருமையாதீனத் திருக்கோயில்களுக்கு

# சென்னை இராஜ்ய கவர்னர் அவர்களின் வருகை

மைசூர் மன்னர் மாட்சிமை தங்கிய ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அவர்கள் நம் மாநிலத்தின் கவர்னராக வந்திருப்பது தமிழுலகிற்கு நல் வாய்ப்பாகும். நம் கவர்னர் அவர்கள் குருபக்தி தெய்வபக்தி அடியார்பக்தி உடையவராய்த் தலயாத்திரைகள் செய்து வழிபட்டு மக்களுக்குத் தெய்வபக்தி மிகுவதற்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். தாயிற் சிறந்த கோயிலுமில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாய் தாயைத் தெய்வமாய் மதிக்கும் மனப் பண்புடையவராய் விளங்கி வருகிறார்கள். 2—8—64 அன்று ஆதீனத் திருக்கோயில்களான மாயூரம்-குமரக்கட்டளை, மாயூரம்-வள்ளலார்கோயில், வேளூர் ஆகிய தலங்களுக்கு வந்திருந்து வழிபாடாற்றினார்கள். மாயூரம்-குமரக்கட்டளையிலும் வள்ளலார் கோயிலிலும் தருமையாதீனம் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் கவர்னர் அவர்களைக் கோயில் மரியாதைகளுடன் வரவேற்றுத் தரிசனம் செய்து வைத்தார்கள். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்குத் தங்கக் கவசங்கள் சார்த்தப்பெற்றிருந்தன. ஸ்ரீ வள்ளி ஸ்ரீ தெய்வயானைக்குப் புதிதாகச் செய்யப் பெற்றுள்ள தங்கக் கிரீடங்கள், பாதங்களை கவர்னர் அவர்கள் கையில் கொடுத்துப் பெற்றுச் சார்த்தப்பெற்றன. வள்ளலார் கோயிலில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்தார்கள். கோயில் மரியாதைகள் செய்யப்பெற்றன. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்குத் தங்கக் கவசம் சார்த்தப் பெற்றிருந்தது. வைத்தீசுவரன்கோயில் வள்ளலார்கோயில் இரண்டு ஆலயங்களிலும் ருத்ரகும்ப அபிஷேக அர்ச்சனைகள் நடத்தி மகிழ்ந்தார்கள்.

வேளூரில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் வழக்கம்போல் கார்த்திகைத் திருநாளில் ஸ்ரீ செல்வமுத்துக்குமரனை வழிபட எழுந்தருளியிருந்தார்கள். ஆடிக்கார்த்திகைத் திருநாளாதலின் அன்பர்கள் பல்லாயிரவரும் கூடியிருந்தனர். கவர்னர் அவர்களை வேளூர் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்று வழிபாடு செய்வித்தார்கள். பூரணகும்ப மரியாதைகளும் சிறப்பான வரவேற்புக்களும் அளிக்கப்பெற்றன. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப்பெருமான் சந்நிதியில் கவர்னர் அவர்களும் கவர்னர் குடும்பத்தாரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிகளைத் தோய்ந்து வணங்கி அருளாசி பெற்றார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் கவர்னர் அவர்கட்குப் பொன்னாடை போர்த்திப் பிரசாதங்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

கவர்னர் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருக்கரத்தாலேயே தங்கள் குடும்பத்தார்க்கும் பிரசாதங்கள் வழங்கியருளும்படி வேண்டிக்கொண்டார்கள். அவ்வண்ணமே ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எல்லோர்க்கும் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமார ருக்கு நவரத்ன கவசம் சார்த்தப்பெற்றிருந்தது. வழிபாடு களை முடித்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிகளை வணங்கிக் கவர்னர் அவர்கள் விடைபெற் றார்கள். பாதகாணிக்கைகளாகப் பணமும் சால்வை முதலியன வும் முறைப்படி காணிக்கைகளாகச் செலுத்தி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஆசி பெற்றார்கள். இத்தகைய நிகழ்ச்சி சமய உலகிற்கு நல்ல விழிப்புணர்வை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. கவர்னர் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து தமிழ் உலகையும் சமய உலகையும் பாதுகாத்து விளங்குவாராக.

## தருமையாதீனத்தில்

## மகாகயிலாய தரிசன ஆண்டு விழா

திருத்தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் 1959 ஆம் ஆண்டு ஆடி அமாவாசை யன்று தரிசித்த மகாகயிலாயக் காட்சியின் ஐந்தாவதாண்டு விழா 7—8—64 வெள்ளிக்கிழமை யன்று மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது ஸ்ரீ சொக்கநாதர் பூஜை மடத்தில் காலை மாலை இருவேளைகளிலும் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்கு வழிபாடு நிகழ்த்தப் பெற்றது. இரவு வண்ண மின்விளக்குகளால் ஒப்பனை செய்யப் பெற்ற வெள்ளி யிரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலா நிகழ்ந்தது. அவ்வமயம் பற்பலவூர்களிலிருந்தும் வந்த திருமுறை இசைவாணர்களின் திருமுறைப் பாராயணம் தக்க இன்னிசைக் கருவிகளுடன் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் உடன் எழுந்தருளினார்கள். கயிலாய நிலையத்தில் சிறப்பு வழிபாடும் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் பிரசாதங்கள் போடப்பட்ட துணிப்பைகளை அன்பர்களுக்கு வழங்கியருளினார்கள். மாயூரம் முதலிய இடங்களிலிருந்து அன்பர்கள் பலர் வந்து தரிசித்து மகிழ்ந்தனர். மாலை 5மணிமுதல் ஸ்ரீசொக்கநாதர் பூஜைமடத்தில் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களாலும், ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்களாலும் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

# ஆடிப்பூரத் திருவிழா

## வேளூரில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகை அம்பாள் ஆடிப்பூரத் திருவிழா 1—8—64 சனிக்கிழமை முதல் தொடங்கி 10—8—64 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. 9—8—64 அன்று திருத்தேர்த்திருவிழாவும், 10—8—64 அன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருளலும் நிகழ்ந்தன. விழா நாட்களில் சிறந்த பல அறிஞர்களின் சமயச்சொற்பொழிவுகளும் நாள்தோறும் மாலை 6 மணி முதல் தொடங்கி நிகழலாயின. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

## சீகாழியில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஆடிப்பூரத் திருவிழா ஸ்ரீ திருநிலைநாயகியம்பாளுக்கு 1—8—64 சனிக்கிழமை முதல் தொடங்கி 10—8—64 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. 9—8—64 அன்று திருத்தேர்த் திருவிழாவும். 10—8—64 அன்று தீர்த்தங்கொடுத்தருளலும் நிகழ்ந்தன. 3—8—64 திங்கட்கிழமை முதல் சமயச் சொற்பொழிவுகள் தொடங்கி நடைபெற்றன. சொற்பொழிவுகள் நாள்தோறும் மாலை 6 மணி முதல் தொடங்கி நடைபெற்றன. அன்பர்கள் பலர் வந்து கேட்டு உய்ந்தனர்.

## திருக்கடவூரில் :-

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு ஆடிப்பூரத் திருவிழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. 1—8—64 சனிக்கிழமை தொடங்கிய விழா 10—8—64 அன்று தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுற்றது அன்பர்கள் வந்து தரிசித்து உய்ந்தனர்.

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய
## சமயப் பிரசார நிலையச் செய்தி

# சோழநாட்டுத் தல யாத்திரை

சென்னைத் தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினர் 20—7—64 முதல் 27—7—64 முடிய சோழநாட்டில் காவிரியின் வடகரையில் உள்ள அறுபத்துமூன்று தலங்களுள் முப்பத்தொரு தலங்களில் வழிபாடும், சமயப் பிரசாரமும் சிறப்பாக நிகழ்த்தினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதீன ஆட்சியில் உள்ள திருக்கோயில்களில் வழிபாட்டிற்கும் சமயப் பிரசாரத்திற்கும், உண்டி உறையுளுக்கும் தக்க ஏற்பாடு செய்வித்தருளினார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர், திரு. M.S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் யாத்திரை செல்லும் தலங்கட்கெல்லாம் சுற்றறிக்கை விடுத்து வழிபாடும், சமயப் பிரசாரமும் சிறக்க ஏற்பாடு செய்து உதவினார்கள். மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 20—7—64 விடியற் காலை வழிபாட்டுக் குழுவினரை வாழ்த்துரை அருளி வழியனுப்பி வைத்தார்கள். "சோழநாட்டுக் காவிரிக்கு வடகரையில் உள்ள தலங்கள்" என்ற புத்தகம் நிலைய அன்பர்களான மேயர் கம்பனி திரு. R. மாசிலாமணி முதலியார், திரு. K. C. நாகலிங்க முதலியார், டாக்டர் திரு. C. P. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகியவர்களால் அன்பளிப்பாக வெளியிடப்பெற்றது.

20—7—64 இல் சிதம்பரத்திலும், 21—7—64 இல் திருவேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை, ஆச்சாள்புரம் ஆகியவற்றிலும் வழிபாடும் பிரசாரமும் நடந்தன. வழிபாட்டிற்குத் தில்லைவாழந்தணர்களும், செயலாளர் திரு. ஆனந்தநடேசதீக்ஷிதரும், நாகநாத தீக்ஷிதரும் தில்லையம்மன்கோயில் அறங்காவலர் திரு. M. M. பொன்னம்பலம் பிள்ளை, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர், வித்துவான், திரு. S. சேது சுப்பிரமணிய பிள்ளை, நடராஜா ஜுவல்லரி திரு. இரத்தினசாமி செட்டியார், சி. ப. தேவாரப் பாடசாலை திரு. இராமலிங்க முதலியார் முதலியவர்களும் தக்க ஏற்பாடுசெய்து உதவியதோடு குழுவினருக்கு உண்டியும் உறையுளும் அளித்து உபசரித்தார்கள்.

22—7—64 இல் திருமயேந்திரப்பள்ளி, சீர்காழி, திருக்கோலக்கா, திருக்குருகாவூர், தென்திருமுல்லைவாயில் ஆகிய தலங்களில் வழிபாடும் சமயப் பிரசாரமும் நடைபெற்றன. இங்கு தருமையாதீனச் சார்பிலும், திரு. M. T. குழந்தைவேல் செட்டியார், திரு. சொ. சீநிவாச முதலியார், வடகால் துரை ஆகியோர் சார்பிலும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றதோடு குழுவினருக்கு உண்டியும் உறையுளும் அளித்து உபசரிக்கப் பட்டது.

23—7—64இல் திருவெண்காடு, கீழைத்திருக்காட்டுப்பள்ளி, திருக்கடைமுடி, திருச்சாய்க்காடு, திருப்பல்லவனீச்சரம் ஆகிய தலங்களில் வழிபாடும் சமயப் பிரசாரமும் நடைபெற்றன. இத்தலங்களில் மேலையூர் சிவராஜயோக மடத்து அதிபர், ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள் அவர்கள், திருச்சாய்க்காட்டுக்கோயில் அறங்காவலர், திரு. சம்பந்தம் பிள்ளை, நிர்வாக அதிகாரி சோமசுந்தரம், திருவெண்காடு தேவஸ்தான மானேஜர், திரு. வேங்கடரமணி, திரு. ஐயாறு முதலியார் ஆகியோர்கள் வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்தும், குழுவினருக்கு உண்டியும் உறையுளும் அளித்தும் உபசரித்தார்கள்.

24—7—64 இல் வைத்தீசுவரன்கோயில், திருப்புன்கூர், திருக்கண்ணார்கோயில், திருநின்றியூர், மாயூரம், வள்ளலார் கோயில், திருநீடூர் ஆகிய தலங்களில் வழிபாடும் சமயப் பிரசாரமும் நடைபெற்றன. இத்தலங்களில் தருமையாதீனச் சார்பிலும், வைத்தீசுவரன்கோயில் திரு. S. N. சீநிவாச ரெட்டியார் சார்பிலும் வழிபாட்டிற்கு ஏற்பாடும், உண்டி உறையுள் வசதியும் சிறப்புற அமைக்கப்பெற்றன.

25—7—64 இல் திருத்தருமையாதீனம், திருஅன்னியூர், திருவேள்விக்குடி, குத்தாலம், திருமணஞ்சேரி, திருஎதிர்கொள்பாடி, திருப்பந்தணைநல்லூர் ஆகிய தலங்களில் வழிபாடும் சமயப் பிரசாரமும் நடைபெற்றன. இத் தலங்களில் தருமையாதீனச் சார்பிலும், திருப்பந்தணைநல்லூர் அறங்காவலர்,

நிர்வாக அதிகாரி, திரு. மாணிக்க முதலியார் சார்பிலும் தக்க ஏற்பாடு செய்திருந்ததோடு குழுவினருக்கு உண்டி உறையுள் வசதியும் செய்து உபசரிக்கப்பெற்றது.

26—7—64 இல் திருக்குறுக்கைவீரட்டம், திருக்கருப்பறிய லூர், திருக்குரக்குக்கா, திருப்பழமண்ணிப்படிக்கரை. திருவாழ் கொளிபுத்தூர் ஆகிய தலங்களில் வழிபாடும் சமயப் பிரசாரமும் நடைபெற்றன. இத் தலங்களில் தருமையாதீனச் சார்பிலும், துறைசை ஆதீனச் சார்பிலும், அவ்வக்கோயில் அறங்காவலர் சார்பிலும் வழிபாட்டிற்கும். சமயப் பிரசாரத்திற்கும் தக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டதோடு, உண்டி உறையுள் வசதிகளும் குழுவினருக்கு அளிக்கப்பட்டன.

27—7—64 இல் திருக்கலிக்காமூர் திருவாமூர், திருநாவலூர் ஆகிய தலங்களில் வழிபாடும், சமயப் பிரசாரமும் நடைபெற்றன. இங்கு திரு. S. சேதுசுப்பிரமணிய பிள்ளை, திரு. M. அசுவத்தராம ரெட்டியார் ஆகியவர்களின் உபசரிப்பில் வழிபாடும். சமயப் பிரசாரமும் நடைபெற்றதோடு உண்டி வசதியும் குழுவினருக்கு அளிக்கப்பட்டன. மேலும் ஒவ்வொரு திருக்கோயிலிலும் அவ்வக்கோயில் அறங்காவலர்கள், சிவாசாரியர்கள், நிர்வாக அதிகாரிகள் முதலியோர் மிகுந்த ஆர்வத்தோடு குழுவினரை வரவேற்று உபசரித்தது போற்றத்தக்கதாய் அமைந்திருந்தது.

இத் தல யாத்திரை அனுபவக் கட்டுரை அடுத்த இதழ் முதல் வெளிவரும்.

# எதிர்காலம்

திரு. கே. முத்துஜோதிடர்

( குரோதிஞு ஆவணிமீ 1உ முதல் 32உ முடிய)
( 16—8—64 முதல் 16—9—64 முடிய )

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி நக்ஷத்திரம் நான்கு பாதங்களும் பரணி நக்ஷத்திரம் முதல் பாதமும் சகல சுபத்தையும் தரும். குடும்பத்தில் மங்கள காரியங்களையும் கிரக சுகத்தையும் உண்டு பண்ணும், பரணி நக்ஷத்திரம் 2, 3, 4 பாதங்கள் மிச்ர பலனைத் தரும். சஞ்சாரம் அதிகமாகும். அதில் சில சிரமங்களையும் காட்டும். கார்த்திகை முதல் பாதம் உத்தியோக உயர்வைத் தந்து விவாகாதி சுபங்களைத்தரும். திங்கள், செய்வாய் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை $\frac{3}{4}$ - ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதங்களும் விசேஷ நன்மைகளையும் யாத்ரா பலனையும் கிராம பூமி லாபங்களையும் கிரக சுகத்தையும் உண்டு பண்ணும். உலக பிரசித்தியையும் தரும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் சுபங்கள்மூலம் விசேஷமான விரயத்தையும் வாகனுதி யோகங்களையும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வாங்குதலையும் பொதுக்காரியங்களில் ஈடுபடுதலையும் ஜயமும் உண்டுபண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.

புனர்பூசம் 4ம் பாதம் சுபத்தைத்தரும். ஜீவன விருத்தி ஏற்படச்செய்யும். பூசம் நான்கு பாதங்களும் மிச்சிர பலனைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவு ஏற்படச்செய்யும், ஆனுலும்

காரியங்கள் சாதனமாகும். ஆயில்யம் நான்கு பாதங்களும் மகா ஜனங்களின் ஆதரவுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடச் செய்யும் எங்கும் நன்மதிப்பும் கீர்த்தியும் உண்டாகும். விவகாரங்களும் ஜெயிக்கும். ஆனாலும் செலவினங்கள் அதிகமாகும். கிரிஷி வாணிஜ்யங்களில் கவலைகாட்டும். மற்றவை யாவும் சுபம். வெள்ளி, சனி சுபமாகும்.

## 5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் சுபயோகத்தைத்தரும். விவகாதி மங்கள காரியங்கள் நடைபெறச்செய்யும். உத்தியோக உயர்வும் மேலோர் பெரியோர் அன்பும் ஏற்படச்செய்யும். சனி. வியாழன் சுபமாகும்.

## 6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் மகத்தான காரியங்களில் ஈடுபடச்செய்யும். விசேஷ விரயாதிகளுடன் அசாத்தியமெல்லாம் சுபலமாக சாதிக்கச்செய்யும். நூதன பிரதிஷ்டா பலன்களும் பூமி லாபமும் கிரக சுகபோகபோக்கியங்களும் புத்திராதிகளால் நன்மையும் உலக பிரசித்தியையும் தரும். தெய்வபலம் முன்னிற்கும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். சஸ்யவிருத்தி ஏற்படும். திங்கள், புதன் சுபமாகும்.

## 7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலாராசி 9 பாதங்களும் சதாதெய்வ சிந்தனையோடும் உலகத்தில் இதுவரையில் கண்டிராத அசாத்தியமான தெய்வீகத் தன்மை பொருந்திய சகல காரியங்களையும் சாதிக்கச்செய்யும் ; ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள்சேரும். மேலோர் பெரியோர்களுடைய அன்பையும் உலகப்பிரசித்தியையும் உண்டுபண்ணும். சனி, செவ்வாய் சுகமாகும்.

## 8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விசாகம் 4ம் பாதமும், அனுஷத்தில் முதல் இரண்டு பாதமும் சுபத்தைத்தராது. சதா கவலைகளையும் ரோகத்தையும் தரும். அனுஷத்தில் பின் இரண்டு பாதமும் கேட்டை நான்கு பாதமும் மிச்சிர பலனைத்தந்தும் கிரக சுகபோகங்களையும். விவாகாதி மங்கள காரியங்களையும் அதிக செலவினங்களையும் தந்து மனதிற்கு சந்தோஷத்தைத்தரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

மூலம் நான்கு பாதங்களும் சிரமத்தோடு காலம் நடக்கச் செய்யும்; மனம் சாந்தி இருக்காது. பூராடம் நான்கு பாதங்களும் உத்திராடம் முதல் பாதமும் விசேஷ சுபத்தை உண்டு பண்ணும். குடும்பம் ஓங்கும். தெய்வீகத்தன்மை பொருந்திய பெரியோர்களின் அன்பு பூர்ணமாக கிடைக்கச்செய்யும். கிரக சுகம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் விசேஷ சுகத்தைத்தரும். உத்தியோக உயர்வும் மேல் பதவிகளும் கிடைக்கச்செய்யும். ஸ்திர சுகவாசம் ஏற்படும். தார புத்திராதி சுகமும் நஷ்டதன பிராப்தியும் ஏற்படும். ஆரோக்யம் உண்டுபண்ணும். ஞாயிறு, செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி - ¾.

கும்பராசி 9 பாதங்களும் வெகுநாளாய்த் தீராத வியாதி நீங்கி ஆரோக்யத்தைத்தரும். கிரகலாபம் ஏற்படச்செய்யும். புத்திராதிகளால் சுகம் உண்டுபண்ணும். தெய்வீக காரியங்கள் அதிகமாகும். பிரதிஷ்டா பலன் கிடைக்கச்செய்யும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் ' ஜீவனவிருத்தியைத்தரும். ஸ்திர சுகவாசம் ஏற்படச்செய்யும், க்ரிஷிவாணிஜ்யத்தில் அதிக லாபத்தைத் தந்து உலக பிரசித்தியையும் கீர்த்தியையும் தரும். தெய்வீக பலத்தால் சகல காரியங்களும் சுலபசாத்தியமாகும். ராஜாங்கத்தால் கௌரவங்களும் உண்டாகும். சுப சோபனாதிகள் மூலமாய் அதிக விரயத்தைத்தந்து மனதிற்குப் பரம சந்தோஷத்தையும் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு:- நம் தக்ஷிணபாரத மஹாஜனங்களுக்கும் கனதனவான்களுக்கும் மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வதாவது சென்றமாத இதழிலேயே குறிப்பில் ஆடிமாதம் ஆரம்பம் முதல் கொண்டே நம் தக்ஷிணபாரத மஹாஜனங்களின் பக்தி பரவசத்தாலும் மஹாயக்ஞம் முதலிய பிரதிஷ்டா பலன்களாலும் கருணாமூர்த்தியாகிய ஸ்ரீஸர்வேச்வரன் அருள் ஏற்பட்டு; கிரஹகதிகள் எவ்வளவு மோசமாக இருந்தாலும், சுபிக்ஷத்துக்கு அறிகுறியாக விசேஷமாகப் பல இடங்களிலும் வருஷங்கள் ஏற்பட்டு

கிருஷிவிருத்தியும் ஸஸ்யவிருத்தியும் ஏற்படும் என்று தெரிவித்துள்ளேன். அதேவிதமாகவே இந்த ஆவணி மாதமும் எங்கும் கண்ட வருஷமாக மழை ஏற்பட்டு எங்கு தர்மமும் தெய்வீகத் தன்மையும் இருக்கிறதோ அந்த அந்த இடங்களை பிரத்யமாகக் காண்பிக்கச்செய்யும், சுபிக்ஷத்துக்குச் சூசகமாகவே இருக்கும்; இவைகள் எல்லாம் தென்பாதரத்தில் காவேரி தீரத்தை மத்ய பாகமாய்க்கொண்ட இடங்களில் விசேஷமாக ஸௌக்யத்தைத் தரும்; விந்தியோத்தர தேசங்களிலும் ஹிமாலய பிரதேசங்களிலும் தெற்கு ஸமுத்திர ஓரங்களிலும்; வடகிழக்கு வடமேற்கு. அந்நிய நாடுகளிலும்; பஞ்ச பூதங்களின்; (பிருதிவி, அப்பு. தேஜஸ் வாயு ஆகாசம், இவைகளின் இயற்கைக் கோளாறுகள் அதிகமாகி கலகங்களும் அதிகமாகி பிரஜைகளுக்கு மஹத்தான சிரமத்தை உண்டுபண்ணும்; ஆகையால்;|உலகமக்கள் பூராவுமே. வேற்றுமைகளை மறந்து ஒவ்வொருவரும் தன் கடமை யாகவே முன் இதழ்களில் எழுதி வந்தபடியே தெய்வீக காரியங்களை ஸதா செய்துகொண்டு வர உலகம் பூராவுக்கும் எவ்வித பயமும் இல்லாமல், துர்பிக்ஷம் எல்லாம் நீங்கி, சுபிக்ஷமம் உண்டாகி ஸமஸ்தமங்களமும். உண்டாகும் கடவுள் காப்பார்.

---

## EXRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswami Devasthanam, Tirucadaiyur.

Today 15-7-64, I had the good fortunate to visit the ancient temple at Tirukkadayur under the kind and worshipful maintenance of Dharmapuram Adeenam. The temple is maintained very neatly and even the entry into it gives a great ennobling feeling. I feel greatly satisfied with my prayer in the temple which has given me much peace of mind.

I am thankful to the authorities for the uniform courtesy and kindness in showing me round and explaining the important events connected with the ancient history of the temple.

(Sd.) K. V. Subramanian,
15—7—64. Personal Asst. Traffic,
Office of P. M. G. Madras.

## சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய
## சமயப் பிரசார நிலயச் செய்தி

# ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை விழா

சென்னை, தியாகராயநகரில் உள்ள தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயத்தில் 12—7—64 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-30 மணிக்கு ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை விழாக் கொண்டாடப்பெற்றது. மதுரையாதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துத் திருவாசகத்தின் சிறப்பையும், மணிவாசகர் தொண்டின் திறத்தையும் விளக்கி அருளுரை வழங்கினார்கள். 'பாக்கியலக்ஷ்மி' ஆசிரியர் திரு. பா. சொக்கலிங்கம் அவர்கள் "மணிவாசகமும், மணிவாசகரும்" என்பதுபற்றி அரியதொரு விரிவுரை நிகழ்த்தினார்கள். வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் வரவேற்புரையும், நன்றியுரையும் நவின்றார்கள். வித்துவான். திரு. ந. இராமலிங்கம் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினார்.

## வைத்தீசுவரன்கோயில்

# கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

2—8—64 கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் சார்பில் வைத்திசுவரன்கோயில் ஸ்ரீ தையல்நாயகி அம்பாள் சமேத ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் அபிஷேக அர்ச்சனை செய்த விபூதி குங்குமப் பிரசாதங்களும், சந்தனக்குழம்புப் பிரசாதமும் 3—8—64 அன்று மாலை 7 மணிக்குச் சென்னை, சமயப் பிரசார நிலைய மன்றத்தில் திரு. E. K. அருணசல முதலியார் அவர்கள் தலைமையில் திருப்புள்ளிருக்குவேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ்ப் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கும் உறுப்பினர்கட்கும் வழங்கப்பட்டன. திரு. P. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினார்

உ

குருபாதம்

# வித்துவான் வகுப்பு மாணவர் வெற்றி

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் தமிழ் வித்துவான் புகுமுக வகுப்பு (Entrance) மாணவர் நால்வர் 1964 மார்ச்மாதம் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்விற்கு அனுப்பப்பெற்று நால்வரும் வெற்றி பெற்றனர். ஷெ முதனிலை வகுப்பு (Preliminary) மாணவ மாணவியர் அறுவர் தேர்விற்கு அனுப்பப் பெற்று அறுவரும் தேறினர். ஒருவர் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சிபெற்றார்.

கோடை விடுமுறைக்குப் பிறகு ஜூலைமாத முதல் நாள்தோறும் மாலை 6-30 மணி முதல் 8-மணி வரை புகுமுக வகுப்பு, முதனிலை வகுப்பு, நிறைநிலை வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-8-64.